# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 18 இதழ் - 1 ஜனவரி - 2005



வெளியிடுவோர்


**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கயம்-638 701.
தமிழ்நாடு, இந்தியா

✆ 04257 - 230030 Cell : 98427 - 30382 , 98428 - 30382
E-mail : kangayamcofc@eth.net

# BIBLE MEDITATION

**TV PROGRAM**




## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை .......... 1
2. கர்த்தருடைய நாமத்தை நாம் ஏன் தொழுது கொள்கிறோம்? .......... 10
3. மாணவர் சேர்க்கை அறிவிப்பு .......... 14
4. பெண்கள் பகுதி .......... 15
5. வாலிபர் பகுதி .......... 19
6. சிறுவர் பகுதி .......... 22
7. யூதா ஒரு கண்ணோட்டம் .......... 24
8. விசுவாசத்தின் அடிப்படைகள் .......... 25
9. தேவ சமூகத்திற்கு எட்டிய பாவத்தின் சத்தம் .......... 30

# THIRUMARAI AASAAN

**Published by Church of Christ**

S. Rajanayagam
Editor

J.C. Choate
Honorary Editor

Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 18 January - 2005 Issue - 1**


ஆசிரியர் உரை

## ... அறிவதே நித்திய ஜீவன்

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றையும், அவருடைய பாடுகளையும் நமக்கு வெளிப்படுத்தும் நான்கு நற்செய்தி நூல்களில், யோவான் சுவிசேஷம் சற்று வித்தியாசமானது. முதல் மூன்று நற்செய்தி நூல்களுக்குமான ஓர் இணைப்பு நூலாக இது உள்ளது. இயேசுவானவரின் ஏழு அற்புதங்களையும், ஏழு "நானே"க்களையும் மொத்தத்தில் சுற்றி வரும் இந்நூல், புரிந்து கொள்வதற்கு மிகவும் எளிமையானது. அதே நேரத்தில், கருத்தினடிப்படையில் மிகவும் ஆழமானது, வல்லமை நிறைந்தது. இதன் ஆசிரியரான யோவான் நற்செய்தியாளரின் நோக்கம் மிகத் தெளிவானது. இந்நூலை வாசிப்பவர்கள் இயேசுவானவரின் தெய்வீகத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டு, அதனடிப்படையில் அவர் ஊழியத்தின் மீது முழு நம்பிக்கை கொண்டு, அவரில் விசுவாசம் வைப்பதோடு அவருடைய நாமத்தினாலே ஒவ்வொருவரும் நித்திய ஜீவனை அடைய வேண்டுமென்ற நோக்கோடு எழுதியுள்ளார். ( யோவா 20:30,31)

இப்படி எல்லாரும் நித்திய ஜீவனை அடைய வேண்டுமென்பதை நோக்கமாகக் கொண்டிருக்கும் இந்த யோவான் நற்செய்தியாளர், வெறுமனே, நித்திய ஜீவன், நித்திய ஜீவன் என்று மாத்திரம் பேசிக்கொண்டிராமல், எது நித்திய ஜீவன் என்றும், அதை எப்படிப் பெற்றுக் கொள்வதென்றும் அழகாக தொகுத்து கொடுத்துள்ளார். அதைத்தான் நாம் யோவான் 17:3-ல் பார்க்கிறோம். **"ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்"** என்று. இங்கே, சொல்லப்பட்டிருக்கும் நித்திய ஜீவன் பற்றி நாம் நமது ஆராய்ச்சியில் இறங்குவதற்கு முன்பாக, இந்த வசனத்தின், மற்றும் இந்த அதிகாரத்தின் பின்னணி பற்றி கொஞ்சம் பார்த்து விடுவோம்.

யோவான் 17 ஆம் அதிகாரம், ஒட்டுமொத்த வேதாகமத்திலுள்ள மிகச் சிறந்த அதிகாரங்களுள் ஒன்று. பெரும்பாலான கிறிஸ்தவர்கள் மத்தேயு 6 ஆம் அதிகாரத்திலுள்ள மாதிரி ஜெபத்தை கர்த்தருடைய ஜெபம் என்று நினைத்து, அது கொடுக்கப்பட்ட சந்தர்ப்பமும், நோக்கமும், அதில் அடங்கியிருக்கும் பொருளும் தெரியாமல், கிளிப்பிள்ளையைப் போன்று இன்றளவும் சொல்லிக் கொண்டுள்ளனர். ஆனால், வேதாகமத்தில், கர்த்தருடைய ஜெபம் என்று ஒன்றை அழைக்க வேண்டுமானால், அப்படி அழைக்கப்படுவதற்கு மிகவும் பொருத்தமானது, யோவான் 17 ஆம் அதிகாரம் தான்.

இந்த ஜெபத்தை ஏறெடுப்பதற்கு முன்பாக, ஒரு மேல் வீட்டில் தனக்கு நெருக்கமான சீடர்களோடு சேர்ந்து பஸ்கா பண்டிகையைக் கடைபிடித்து அவர்களோடு உரையாடினார். இன்னும் கர்த்தருடைய பந்தியையும் அங்கு ஏற்படுத்தினார், இப்படிப் பல முக்கிய நிகழ்வுகள் அங்கு நடந்துள்ளபடியால் அந்த மேல்வீட்டை ஓர் ஆசீர்வதிக்கப்பட்ட வீடு என்று சொன்னாலும் தவறில்லை, அப்படித்தானே. அந்த உரையாடலை முடித்து அவர்களை விட்டுப் பிரியும் நேரம் வந்து விட்டது. அவருடைய மனக் கண்களுக்கு முன்பாக, சிலுவைப்பாடுகள் அப்படியே பயமுறுத்திக் காட்சி தந்தது. ஆம் சிலுவையின் நிழல் அவர் மீது அப்போது படிந்திருந்தது. எதிர்கொள்ள வேண்டிய சோதனை, பட வேண்டிய வேதனைகள் எல்லாம் கண் முன் நின்றது. ஆயினும், ஓர் நம்பிக்கையற்ற நிலையில் அந்த உரையாடலை முடிக்க அவர் விரும்பாமல், நான் உலகத்தை ஜெயித்தேன் என்று சொல்லி அவர்களிடமிருந்து தற்காலிகமாக விடை பெறுகிறார். (யோவா 16:33)

அப்படி விடை பெறுவதற்கு முன்பு, ஜெபவீரராகிய நம் இயேசு ஆண்டவர் மிக முக்கியமான இச்சமயத்தில், ஒரு ஜெபம் இல்லாமலும் அவர்களை அனுப்ப விரும்பவில்லை. ஆம், அவர்களோடு சேர்ந்து அங்கே ஜெபித்தார். ஒரு ஜெபம் எப்படியிருக்க வேண்டுமென்பதற்கு, இந்த ஜெபத்தின் மூலம் அவர் இலக்கணம் வகுத்துக் கொடுத்துள்ளார். எளிமையான மொழி நடை, ஆழமான பொருள், ஊக்கமான வேண்டுதல் என்பன இதன் சிறப்பு. நம்முடைய பெரும்பாலான ஜெபங்கள், நம்மையும், நம்முடைய தேவைகளையும், நம் குடும்பத்தையும், குடும்பத்தின் காரியங்களையும் சுற்றி வட்டமிடுவது போல, இந்த ஜெபம் இல்லாமல், தனக்காகவும், தன்னுடைய சீடர்களுக்காகவும், பின்னாளில் அவரில் விசுவாசம் வைக்கும் நம்மைப் போன்றவர்களுக்காவும் ஜெபித்துள்ளார். இந்த ஜெபத்தில் தான் "நித்தியஜீவன்" பற்றிய ஓர் அருமையான விளக்கத்தையும் வெளிப்படுத்தியுள்ளார்.

அந்த "நித்திய ஜீவன்" பற்றியே இந்த மாதத்தில் நாம் பார்க்க உள்ளோம். நித்திய ஜீவன் பற்றிப் பல தவறான கருத்துக்கள் கிறிஸ்தவர்கள் என்று தங்களைக் கூறிக் கொள்பவர்களிடையே நிலவுகிறது. எது நித்திய ஜீவன் என்று தெரியாமலேயே, தங்களைத் தேர்ந்த கிறிஸ்தவர்கள் என்றும் எண்ணிக் கொள்கின்றனர். அநேகருக்கு, இந்த நித்திய ஜீவன் இம்மையின் வாழ்க்கையில் பெற்று அனுபவிக்கக் கூடிய ஒன்றா அல்லது மறுமையின் வாழ்க்கையில் கிடைக்கக்கூடிய ஆசீர்வாதமா என்பதில் தெளிவற்ற நிலையே காணப்படுகிறது. இதுவே தெரியாத பட்சத்தில், நித்திய ஜீவனுக்கு சொந்தக்காரர்களாக நாம் எப்படி மாற முடியும்? நித்திய ஜீவனுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்று நினைத்துக் கொண்டே அதை இழந்து போகும் நிலை ஏற்பட்டுவிடாதா?

இந்த நித்திய ஜீவன் பற்றி வேத வசனங்கள் என்ன சொல்லுகிறது என்று பார்ப்போம். யோவான் அப்போஸ்தலன், தனது நற்செய்தி நூலில் **என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக் கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு** என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார். (யோவா 5:24) இன்னும் I யோ 5:11 ம் வசனம் தேவன் நமக்கு **நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்த சாட்சியாம்** என்றும் கூறியுள்ளார். ஆக இவ்வசனங்கள், நித்திய ஜீவனானது இப்பூமியில், **ஆவிக்குரிய வாழ்வு ஆரம்பம் ஆகும்போது தொடங்கி விடுகிறது** எனத் தெளிவாகக் கூறுகிறது.

அதே நேரத்தில், வேறு பல வசனங்கள், தேவனுக்கு ஊழியம் செய்வதால் கிடைக்கும் **முடிவான பலன் நித்திய ஜீவன்** என்று கூறுகிறது. உதாரணமாக, மத்தேயு 25:46 அந்தப்படி இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், **நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும்** போவார்கள் என்றார். இன்னும் மாற்கு 10:30, "இப்பொழுது இம்மையிலே, துன்பங்களோடே கூட நூறத்தனையாக, வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே **நித்திய ஜீவனையும்** அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றுள்ளது. மேலும், ரோமர் 6:22ல் இப்பொழுது நீங்கள் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு தேவனுக்கு அடிமைகளானதினால் பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ **நித்திய ஜீவன்** என்று சொல்லப்பட்டுள்ளது.

ஆக, நித்திய ஜீவன் பற்றிக் கூறும் இந்த இரண்டு வசனப்பகுதிகளையும் நாம் கவனிக்கும் போது, நித்திய ஜீவன் என்பது, அநேகராகிய நாம் நினைப்பது போல, வாழும் கால அளவைக் குறிக்கக்கூடிய ஒன்றாக இல்லாமல், **ஆவிக்குரிய ரீதியில் ஒருவன் வாழும் வாழ்க்கையின் தன்மையைக் குறிக்கக்கூடியதாக**

**இருக்கிறது**. ஒருவனின் ஆவிக்குரிய வாழ்க்கையை நாம் கவனித்துப் பார்த்து அதனடிப்படையில், ஒருவனுக்குள் நித்திய ஜீவன், உண்டா இல்லையா என்பதை நாம் தீர்மானித்து விட முடியும். எப்படியெனில், இதே யோவான் ஆசிரியர் கூறும் போது, தன் சகோதரனைப் **பகைக்கிறவனிடத்தில் நித்திய ஜீவன் இல்லையென்றும்**, தன் சகோதரனிடத்தில் **அன்பு கூருகிறவனிடம், நித்திய ஜீவன் உண்டென்றும்** தெளிவுபடக் கூறுகிறார் (I யோவா 3:14, 15)

இப்படி, இம்மையின் வாழ்க்கையிலும், மறுமையின் வாழ்க்கையிலும் கிடைக்கக்கூடிய, நித்திய ஜீவன் பற்றி வேதாகமம், ஈவு என்றும், **முற்றிலும் இலவசமானது** என்றும் கூறுகிறது. "நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன் என்றும், அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை" என்று நம்முடைய இரட்சகர் கூறியுள்ளார் (யோவா 10:28) மேலும், ரோமர் 6:23 ல் "பாவத்தின் சம்பளம் மரணம் என்றும் தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலுண்டாகும் நித்திய ஜீவன்" என்றும் தேவன் பவுலைக் கொண்டு கூறியுள்ளார். நாம் வாழும் இந்தப் பூமியில் எதுவுமே இலவசம் இல்லை என்ற நிலை இருக்கும் போது, நம்முடைய தேவன் எவ்வளவு பெரிய பாக்கியத்தை இலவசமாகக் கொடுத்திருக்கிறார் என்று எண்ணிப் பாருங்கள். நம்மீது தேவன் கொண்டிருக்கும் அன்பு எவ்வளவு பெரிதென்று அப்போது விளங்கும்.

ஈவு அல்லது இலவசம் என்று நாம் ஒன்றைச் சொல்லும் போது அதற்குப் பொதுவாக, தவறானதொரு விளக்கம் கொடுக்கப்படுகிறது. அதாவது, அதைப் பெற்றுக் கொள்பவர் தன் பங்கிற்கு எதையுமே செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று. ஆனால், இந்த விளக்கம் கண்டிப்பாகத் தவறானது. எப்படியெனில், ஒன்று இலவசமாக இருந்தாலும், அதைப் பெற்றுக் கொள்வதற்கும், அதை அனுபவிப்பதற்கும், குறைந்தபட்சம் அது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். தன்னுடைய பங்கிற்கு எந்தவொரு முயற்சியையும் ஒருவன் செய்யாமல், ஒன்றை தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ள முடியாது. இலவசமாக, ஒன்று கொடுக்கப்படுகிறதென்றால் கூட அவன் போய், அதை பெற்றுக்கொள்ள வேண்டும். (ஏசா. 55:1) அப்படித்தானே. இந்த உண்மை, நித்திய ஜீவனுக்கும் பொருந்தும்.

இப்பொழுது கேள்வியென்னவெனில், தேவனாலே இலவசமாகக் கொடுக்கப்பட்டு, நித்திய காலம் வரைக்கும் நிலை நிற்கும் நித்திய ஜீவன், எங்கே இருக்கிறது என்பது. தேவன், நித்திய ஜீவனை, பெரும் பணத்தோடும், பொருளோடும், பதவியோடும், பட்டத்தோடும், வேறு பல உலக செல்வாக்கோடும் இணைத்து வைக்காமல், அவருடைய வல்லமை மிக்க, **ஜீவனுள்ள வார்த்தைகளோடே** இணைத்து வைத்துள்ளார். இவ்வுண்மையைக்

கீழ்க்கண்ட வசனங்கள் உறுதிப்படுத்துகிறது. **வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே** .... (யோவ 5:39) அடுத்து, **அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறது** (12:50) என்றுள்ளது. இப்படி, இம்மைக்கும் மறுமைக்கும் பயன்படக்கூடிய நித்திய ஜீவனை, தேவன் அவருடைய வார்த்தைகளில் வைத்துள்ளார்.

சரி, இங்கே பிதாவையும், குமாரனையும் **அறிவது** என்றால் என்ன? சாதாரணமாகப் பார்த்தால், அறிவது என்பது ஒரு சராசரி வார்த்தையாகவே தெரிகிறது. நாமெல்லாரும், நான் அவரை அறிவேன், இவரை அறிவேன் என்றும், அவரைத் தெரியும், இவரைத் தெரியும் என்றும், சரியாகத் தெரியாதவர்கள் பற்றிக்கூட கூறுகிறோமே அப்படியா? அதுவா இதற்குப் பொருள். பிதாவையும், அவருடைய குமாரனையும் நாம் இந்த அளவில் அறிந்தால் போதுமென்றா வேதவசனம் கூறுகிறது? நித்திய ஜீவனுக்கு இப்படி பட்டும், படாமலும் அறிந்து கொள்வது போதுமானால், நியாயத் தீர்ப்புக்கே அவசியமிருக்காது தானே. எல்லோரும் பரலோகத்திற்குத் தகுதியாகி விடுவார்களே. ஏனெனில், உலகில் இருக்கும் எல்லோரும் கிறிஸ்துவுக்கு முன் (கி.மு) என்றும், கிறிஸ்துவுக்குப்பின் (கி.பி) என்றும் சொல்லும் போது அவரை ஒரு வகையில் அறிந்து விடுகிறார்கள் தானே ! இதுவா, அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்குப் பொருள்? அல்லது பல கடவுள்களில் பிதாவும், குமாரனும் ஒன்று என்று அறிந்து கொள்வது தான் போதுமா? அல்லது இருக்கும் தெய்வங்களில் இவர் தான் சக்தியுள்ளவர் என்று தெரிந்து கொள்வது போதுமா? அல்லது நானும் இவரை நம்புகிறேன் என்றும், ஏற்றுக்கொள்கிறேன் என்றும் சொல்லுவது தான் போதுமா? சிந்தியுங்கள். எந்தளவு அறிந்து கொள்ள வேண்டும்?

நித்திய ஜீவனுக்கு இப்படிப்பட்ட அறிதல் போதாதெனில், வேறு எப்படிப்பட்ட அறிதல் அவசியமாகிறது என்ற கேள்வி வருகிறது. நித்தியஜீவனை கொடுக்கக் கூடிய இந்த அறிதலுக்கு உதாரணமாக ஆதி 4:1 வசனத்தை நாம் பார்க்கலாம். அங்கே, தேவனால் படைக்கப்பட்ட முதல் மனுஷனாகிய ஆதாம், தன் மனைவியாகிய ஏவாளை **அறிந்தான்** என்றும், **அந்த அறிதலில் காயீன் என்ற ஜீவன் பிறந்தது** என்றும் பார்க்கிறோம். அதற்கு முன்பாக, அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாக இருக்கும்படியாக, தேவன் அவர்களை இணைத்து வைத்தார். (ஆதி 2:24) இந்த தேவத்திட்டத்தின்படியாக, ஆதாம் அவளை அறிந்தான். இந்த அறிதலில் புதிய ஜீவன் பிறந்தது. அப்படியானால், தேவனால் திட்டமிடப்பட்டு ஏற்படுத்தப்பட்ட, ஒரு புதிய ஜீவனைக் கொண்டு வந்த, இந்த அறிதல் எப்படிப்பட்டது? சொல்லுங்கள். அந்த அறிதலை நாம் கவனித்தால், ஆதாம், ஏவாளை ஊனோடும், உணர்வோடும், உயிரோடும் அறிந்திருக்க வேண்டுமென்பதில் நமக்குச் சந்தேகமில்லை. இப்படி அறிந்ததின் பலன் தான் காயீன் என்ற புதிய ஜீவன்.

சரீரப் பிரகாரமாக ஒரு ஜீவனைப் பிறப்பிப்பதற்கே, அதுவும் எழுபது வருஷம் அல்லது பெலத்தின் மிகுதியால் என்பது வருஷம் (சங்90:10). வாழக்கூடிய ஒரு ஜீவனைப் பிறப்பிப்பதற்கே இந்தளவு ஒன்றித்துப்போதல் அவசியமானால், ஆவிக்குரிய ரீதியில், நித்திய காலத்திலும் வாழ்ந்திருக்கக்கூடிய ஜீவனைப் பிறப்பிப்பதற்கு எந்தளவு பிதாவோடும், குமாரனோடும் நாம் ஒன்றித்துப் போக வேண்டுமென்பதை எண்ணிப்பாருங்கள். நாம், நித்திய ஜீவனுக்காக, பிதாவையும், குமாரனையும், நம்முடைய சரீரத்திலும், உணர்விலும், உயிரிலும் அறிந்தே ஆக வேண்டும்.

அப்படியானால், அது எப்படி என்ற நியாயமான கேள்வி இங்கே வருகிறது. சரி, எப்படித்தான் என்று கொஞ்சம் முயன்று பார்ப்போமே.

## I பிதாவையும், குமாரனையும் சரீரத்தில் அறிதல் :

இம்மையிலும், மறுமையிலும் நித்தியஜீவனை நாம் ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்வதற்கு நாம் செய்ய வேண்டிய காரியங்களில் ஒன்று, நாம் பிதாவையும், குமாரனையும் சரீரத்தில் அறிவதாகும்.

நம்முடைய இரட்சகர் வாழ்ந்த காலத்திலிருந்து சுமார் 2000 ஆண்டுகள் கழித்து நாம் வாழ்ந்து கொண்டுள்ளோம். அப்படியிருக்க அவரை சரீரத்தில் கண்டு அறிவது நடக்கக்கூடிய காரியமா என்று நீங்கள் கேட்பது புரிகிறது. வேதவசனமும் நாம் இனி மாம்சத்தில் அறியோம் என்று தான் திட்டமாகக் கூறிவிட்டது. (II கொரி 5:16)

ஆயினும் கூட, II கொரிந்தியர் 4:10 ம் வசனத்தை நீங்கள் கவனியுங்கள். "கர்த்தராகிய **இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு,** இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கும் சரீரத்தில் சுமந்து திரிகிறோம்" என்கிறார். இங்கே பவுலடியார் இயேசுவின் ஜீவனை, அதாவது இயேசுவை போன்று நீத்தியஜீவனை எங்கள் சரீரத்தில் பெற்றுக்கொள்ளும்படி, அவருடைய மரணத்தை, அதாவது, அவருடைய பாடுகளை எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம் என்கிறார். இன்னும், தெளிவாகக் கூறுவதானால், கிறிஸ்துவின் ஊழியத்தினிமித்தம், கிறிஸ்து மரணத்திற்குப் பாத்திரராகத் தீர்க்கப்பட்டுப் பாடுபட்டது போல, இவரும் பாடுபட்டுள்ளார். பவுலடியார் ஊழியத்தினிமித்தம் பட்ட பாடுகள் வேதாகமத்தை வாசிக்கிற ஒருவருக்கும் விளங்காமல் போகாது. இது குறித்து தான், I கொரி 15:31 ல் கூறும் போது **"நான் அனுதினமும் சாகிறேன்"** எனக் கூறியுள்ளார். இன்னும், பிலிப்பியருக்குக் கூறும் போது, இப்படி நான் அவரையும், அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய

பாடுகளின் நிச்சயத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளானேன் என்கிறார் (பிலி 3:10) மேலும், கலாத்தியருக்கு எழுதும் போது, **"கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்தில் தரித்துக் கொண்டிருக்கிறேன்"** என்றும் கூறுகிறார் (கலா 6:17)

பரலோகத்தின் தேவன், பவுலடியாரைக் குறித்து வெளிப்படுத்தியிருக்கும் இந்த காரியங்களைக் கவனித்தால், அப்போஸ்தலன் பவுல் பிதாவையும், குமாரனையும் சரீரத்தில் எப்படி அறிந்தார் என்றும், அதன் மூலம் நாம் அவரை நமது சரீரத்தில் எப்படி அறிய வேண்டுமென்பதும் நன்றாகவே விளங்கும் என நம்புகிறேன். ஒரு வேளை, நான் சத்தியத்தின்படி கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, வசனத்தின்படியாக வாழந்து கொண்டிருக்கிறேன் என்று சொல்வோமானால், பிதாவினிமித்தமும், கிறிஸ்துவினிமித்தமும் நாம் இந்தளவு பாடுகள் படுகிறவர்களாக இருக்கிறோமா? அல்லது நமது விசுவாசத்தினிமித்தம் பாடுகள் வரும் போது அவைகளை ஏற்றுக்கொண்டு, தொய்வில்லா கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதற்கு ஆயத்தமாக உள்ளோமா? சொல்லுங்கள். நாம் பார்க்கும் இந்தக் கருத்தினடிப்படையில் தான், அப்போஸ்தலன் பவுல் உரோமையருக்குச் சொல்லும்போது, **"உங்கள் சரீரங்களை தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும்"** என்று கூறுகிறார் (ரோ 12:1) ஆக, நித்தியஜீவனை இம்மையிலும், மறுமையிலும் பெற்றுக் கொள்வதற்கு எப்படிப்பட்ட அறிதல் அவசியம் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

ஒருவேளை, இன்னும் நீங்கள் உண்மையான சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, இப்பூமியில் நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்ளாத ஒரு வாழ்க்கை வாழ்கிறவர்களாக இருந்தால், இப்புதிய ஆண்டில், நித்திய ஜீவனுக்கானதொரு வாழ்க்கை வாழத் தீர்மானியுங்கள். என் வசனத்தைக்கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு **நித்தியஜீவன் உண்டு** என்று (யோவா 5:24) தேவன் சொல்லுகிறபடியால், நீங்கள் உடனடியாக விசுவாசிகளாக மாறுங்கள். நீங்கள் அப்படி விசுவாசிகளாக மாறும்போது, உங்கள் விசுவாசம், பிசாசுகள் கொண்டிருந்த விசுவாசம் போலில்லாமல் (யாக் 2:19), அப் 6:7ல் காணப்படும் ஆசாரியர்களுடைய விசுவாசம் போன்று, கீழ்ப்படிதலுள்ளதாக இருக்க வேண்டும். இந்த ஆசாரியர்களின் விசுவாசம், சுவிசேஷத்தின் விசுவாசம் (பிலி 1:27). ஆகவே, நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு, கிறிஸ்துவானவர் தந்த புதிய ஏற்பாட்டு உபதேசத்துக்குக் கீழ்ப்படிய வேண்டும். அதாவது, விசுவாசித்து (மாற் 16:16) மனந்திரும்பி (அப் 2:38), அறிக்கையிட்டு (ரோம 10:9,10), பாவ மன்னிப்புக்காகத் தண்ணீரில் முழுகி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும். (அப் 22:16) அதை நாம் செய்தால் **நித்திய ஜீவன்** நமக்கு இப்பூமியின் வாழ்க்கையில் உறுதியாகும்.

## II பிதாவையும், குமாரனையும் உணர்வோடும் உயிரோடும் அறிதல் :

இம்மையிலும், மறுமையிலும் நித்தியஜீவனை நாம் ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்வதற்குச் செய்ய வேண்டிய இன்னொரு காரியம், அவரை நம்முடைய உணர்வோடும், உயிரோடும் அறிதல் ஆகும்.

இப்படி உணர்வோடும், உயிரோடும் அறிவது எப்படி என்பதற்கு நாம் நேரிடையான வசனங்களைக் கொடுக்க முடியாவிட்டாலும், இது சம்பந்தமாக சில காரியங்களைக் கற்றுக்கொள்ளமுடியும் என நம்புகிறேன். உணர்வு என்பது நம்மில் இரண்டறக்கலந்த ஒன்று என நாம் கூறலாம். அந்த உணர்வு சில நேரங்களில் தானாகவே செயல்படும், இன்னும் சில நேரங்களில் அதைச் செயல்படச் செய்ய வேண்டும். சங்கீதம் 53:2 ம் வசனம் இவ்விதம் கூறுகிறது. "தேவனைத் தேடுகிற **உணர்வுள்ளவன் உண்டோ** என்று பார்க்க, தேவன் பரலோகத்திலிருந்து மனுபுத்திரரைக் கண்ணோக்கினார்" என்று. சங்கீதங்களின் காலந்தொட்டு, இன்றளவும் தேவனைத் தேடுகின்ற நிலை, எந்தவொரு மாற்றமும் இல்லாமல் அப்படியே தான் இருக்கிறது. சொல்லப்போனால், அந்த உணர்வு மழுங்கிக்கொண்டே வருகிறது. பக்தி என்பதும், தேவபயம் என்பதும் கடைச்சரக்காகி விட்டது. தேவனை அறியாதவர்களிடம் தான் இந்த நிலையென்றில்லை, அறிந்திருக்கிறோம் என்று சொல்லுகிறவர்களின் வாழ்க்கை நிலையும், மன நிலையும் இதே கதியில் தான் இருக்கிறது.

அப்போஸ்தலன் பவுல், எபேசியருக்கு எழுதும் போது, "அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதயக்கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே, **தேவனுடைய ஜீவனுக்கு** அந்நியராயிருந்து, **உணர்வில்லாதவர்களாய்**, சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கிறார்கள் என்று கூறுகிறார் (எபே 4:18,19) தேவனுடைய காரியத்தில் உணர்வில்லாதவர்களாயிருப்பது நம்மை **தேவனால் கிடைக்கும் ஜீவனுக்கு** அந்நியர்களாக்கிவிடுகிறதாம். அப்படியானால், தேவகாரியத்தில் நாம் இயல்பாகவே உணர்வுள்ளவர்களாயிருந்து செயல்படுகிறவர்களாக இருக்க வேண்டுவது அவசியம். அந்த உணர்வு எப்பொழுதும் நமக்குள்ளாக இருக்க வேண்டும். நேரம் வரும்போது அந்த உணர்வு பற்றி தெரிந்து செயல்பட வேண்டும். அப்படி செயல்பட நாம் தயாரா?

• இதற்கு உதாரணமாக, பழைய ஏற்பாட்டில் நம்மெல்லாருக்குமே தெரிந்த ஒரு சம்பவத்தை உங்களுக்கு எடுத்துக் கொடுக்கிறேன். அது தாவீது - கோலியாத் சம்பவம். சுமார் 10 அடி உயரம் கொண்ட ஆஜானுபாகுவான உடல்வாகும், போர்க்கலை அனைத்தும் தெரிந்து, சரீரத்தின் எல்லா அவயவங்களுக்கும் பாதுகாப்புத் தரும் தற்காப்பையும், எதிரியைத் தாக்குவதற்குத் தேவையான அனைத்து வகை ஆயுதங்களையும் கொண்டிருந்த

பெலிஸ்தனாகிய கோலியாத், தேவனுடைய ஜனமாகிய இஸ்ரவேலை தினம் தினம் நிந்தித்ததை ஆடு மேய்க்கும் ஒரு பொடியனாக இருந்த தாவீது கேட்ட போது, தன் **உணர்வுகளில் கொதித்து எழுந்தான்.** (I சாமு. 17 அதி) தன் எதிரில் நிற்பது யார் என்று அவன் கிஞ்சித்தும் கவலைப்படாமல், "ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்திப்பதற்கு விருத்தசேதனம் இல்லாத இந்த பெலிஸ்தன் எம்மாத்திரம்" என்றான் (17:26). தேவன் என்று வரும் போது, தேவ காரியம் என்று சொல்லும் போது இவனுடைய உணர்வுகள் எப்படி செயல்பட்டிருக்கிறதென்பதைக் கவனியுங்கள். நாமும் கூட, நித்திய ஜீவனைச் சுதந்தரிப்பதற்கு இப்படிப்பட்ட செயல்பாடு உடையவர்களாகத்தான் இருக்க வேண்டும்.

உயிரோடு நாம் அவரை அறிய வேண்டுமென்பதற்கு எடுத்துக்காட்டாக, கொலோ 3:3-ம் வசனத்தை கவனியுங்கள். "ஏனென்றால் நீங்கள் மரித்தீர்கள், **உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது".** அதாவது, கொலோசெ பட்டணத்தார் பாவத்திற்காக மரித்தார்கள். கிறிஸ்துவின் சுவிசேஷத்தினிமித்தம் மரித்தார்கள். அப்படி மரித்ததினாலே என்ன நடந்தது? அவர்களுடைய, உயிராகிய ஜீவன், கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்து விட்டது. அதாவது, அந்தப் பரிசுத்தவான்களின் உயிரும், கிறிஸ்துவின் உயிரும், தேவனுடைய உயிரும் ஒன்றாகி விட்டது. இதையே வேறுவிதமாகச் சொல்வதானால், கொலோசெ பட்டணத்து கிறிஸ்தவர்கள், பிதாவையும், குமாரனையும் தங்கள் உயிரோடும் ஜீவனோடும் அறிந்து நித்திய ஜீவனுக்குப் பங்காளிகளாக மாறியிருக்கிறார்கள்.

ஆகையால், அருமையானவர்களே, பரலோக வாழ்வுக்காக ஆசைப்படுகிறவர்களே, அதைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று பாடுபடுகிறவர்களே, நீங்கள் ஒவ்வொருவரும் பிதாவையும், குமாரனையும் இந்தளவு அறிந்தவர்களாக உள்ளீர்களா? சொல்லுங்கள். **பூமியிலே ஆரம்பமாகி, பரலோக வாழ்விலும் நிலைத்திருக்கக்கூடிய இந்த நித்திய ஜீவன்** போகிற போக்கிலே பெற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று அல்ல. ஒருவேளை, நாம் அவரை இவ்விதம் அறியாத ஒரு வாழ்க்கையை, போலியான கிறிஸ்தவ வாழ்க்கையை நடத்திக் கொண்டிருப்போமானால், ஒரு நாளில் அவர் நம்மை அறிந்து கொள்வார் (வெளி 2:3) அப்பொழுது, நாம் தப்பிக்கவே முடியாது.

ஆகவே, நாம் ஒவ்வொருவரும், இப்புதிய ஆண்டில், நம்முடைய இரட்சகர் பாரத்தோடு நமக்காக ஜெபித்தது போல, பிதாவையும், குமாரனையும் சத்திய வசனங்களின் படி அறிந்து இம்மையில் நித்தியஜீவன் உடையவர்களாய் வாழ்ந்து, மறுமையிலும் நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளுவோம். ஆமென்.

**செ. ராஜநாயகம்.**

# கர்த்தருடைய நாமத்தை நாம் ஏன் தொழுதுகொள்கிறோம் ?

வேதாகமம் அநேக முறை கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுவது பற்றி பேசுகிறது. அதில் சிலவற்றை நாம் கவனிப்போம். நெடுநாளைக்கு முன்பு யோவேல் தீர்க்கன், "அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள் உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர், தரிசனங்களையும் காண்பார்கள் ஊழியக்காரர் மேலும் ஊழியக்காரிகள் மேலும், அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன். வானத்திலும், பூமியிலும் இரத்தம் அக்கினி புகைஸ்தம்பங்களாகிய அதிசயங்களைக் காட்டுவேன். கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும். அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான். கர்த்தர் சொன்னபடி, சீயோன் பர்வதத்திலும் எருசலேமிலும் கர்த்தர் வரவழைக்கும் மீதியாயிருப்பவர்களிடத்திலும் இரட்சிப்பு உண்டாயிருக்கும்" (யோவேல் 2:28-32) என்கிறார்.

பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் மீது இறங்கின போது, அவர்கள் அதுவரை கற்றறியாத பாஷையில் பேசினார்கள். அங்கே இருக்கிறவர்கள் சிலரோ இவர்கள் புது திராட்சை ரசத்தை குடித்திருக்கிறார்கள் என்றார்கள். அதன்பின்பு நாம் வாசிக்கிறோம் "அப்பொழுது பேதுரு பதினொருவரோடுங்கூட நின்று அவர்களை நோக்கி, உரத்த சத்தமாய்; யூதர்களே, எருசலேமில் வாசம்பண்ணுகிற ஜனங்களே, நீங்களெல்லாரும் அறிந்து கொள்வீர்களாக, என் வார்த்தைகளுக்குச் செவி கொடுங்கள். நீங்கள் நினைக்கிறபடி இவர்கள் வெறிகொண்டவர்களல்ல, பொழுது விடிந்து மூன்றாம் மணி வேளையாயிருக்கிறதே தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது. கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும், உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள். உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள். உங்கள் மூப்பர் சொப்பனங்களையும் காண்பார்கள்; என்னுடைய ஊழியக்காரர் மேலும், என்னுடைய ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள். அல்லாமலும் உயர வானத்திலே அற்புதங்களையும் தாழ பூமியிலே இரத்தம், அக்கினி, புகைக்காடாகிய அதிசயங்களையும் காட்டுவேன். கர்த்தருடைய பெரிதும் பிரகாசமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும். அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவனெவனோ

அவன் இரட்சிக்கப்படுவான் என்று தேவன் உரைத்திருக்கிறார். (அப்போஸ் 2:14-21)

பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு யோவேல் தீர்க்கனால் அறிவிக்கப்பட்டது, பெந்தெகொஸ்தே நாளில் எருசலேமில் நிறைவேறியது. அது கிறிஸ்துவின் மரணம், பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படுதல், இரட்சிப்பு வெளியாகுதல் இவைகளோடு சம்பந்தப்பட்டுள்ளது. இவைகள் எல்லாம் கிறிஸ்துவின் மரணத்திற்கு பின்வந்த கடைசி நாட்களில் நடந்தது. எபிரெய ஆசிரியர், கடைசி நாட்களில் தன் குமாரன் மூலமாய் தேவன் திருவுளம் பற்றினார் என்று கூறினார். (எபி 2:1,2) அந்த கடைசி நாட்களில், கிறிஸ்து அப்போஸ்தலர்கள் மூலம் பேசினார். அது புதிய ஏற்பாட்டில் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது. இன்றைக்கு அவர் அதின் மூலமே பேசுகிறார். பவுல் பிரசங்கம் பண்ணினதைப் பற்றி அவர் கூறும் போது, "நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை, இயேசு கிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார். (கலா 1:12) யோவான் பார்த்ததையும், இயேசு கிறிஸ்து சாட்சியாகவும் கூறுகையில், "இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது.

ஆகையால், அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில், பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் மீது இறங்கினபோது, கிறிஸ்து இவ்வுலகத்திலே வந்ததையும், அவர் தேவனிடத்தில் இருந்து வந்தார் என்பதற்கு சாட்சியாக விளங்கிய அற்புதங்கள் பற்றியும் அவருடைய மரணம் பற்றியும், அடக்கம், உயிர்தெழுதல், பரலோகத்திலுள்ள நமது பிதாவினிடத்திற்கு ஏறிச்சென்று, அவருடைய வலது பாரிசத்தில், ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் ஆளுகை செய்யும்படி அமர்ந்தார் என்பது பற்றியும் பிரசங்கித்தார்கள். இதைக்கேட்டு ஏறக்குறைய மூவாயிரம் பேர் என்ன செய்யவேண்டும் என்று அறிய விரும்பினார்கள்," வசனம் கூறுகிறது பேதுரு அவர்களை நோக்கி, நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி; இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சிகூறி, மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என்றும் புத்தி சொன்னான். அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் எறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" (அப்போஸ். 2:38-42).

நாம் இங்கே சில காரியங்களைக் கவனிப்போம். முதலாவதாக, பேதுரு, கர்த்தர் ஜனங்களை அழைப்பதைப்பற்றி இங்கே பேசுகிறார். அவர் எப்படி அதை செய்கிறாராம்? பவுல் சொல்கிறார், "நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையை அடையும் பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்" (2 தெச 2:14) என்கிறார். அதாவது பவுல் போதித்த சுவிசேஷத்தினால் தேவன் அவர்களை அழைத்தார். ஆனால் சுவிசேஷம் என்றால் என்ன? ரோமர் 10:15 ன் படி கர்த்தரின் பாடு, மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலினால் வரும் நற்செய்தி. அது மாத்திரமல்ல, கர்த்தருடைய பாடு, மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலினால் வரும் இரட்சிப்பும் சுவிசேஷமாகும் (I கொரி 15:1-4). ஒருவன் இரட்சிக்கப்பட சுவிசேஷத்தின் சில கட்டளைகளை நிறைவேற்ற வேண்டும். அதில் ஒன்று, நாம் கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைக்க வேண்டும். அதில் இன்னொன்று, நாம் பாவத்திலிருந்து மன்னிப்பு பெற மனந்திரும்ப வேண்டும். இறுதியாக, ஒருவன் பாவத்திலிருந்து மன்னிப்பு பெற ஞானஸ்நானம் பெற வேண்டும். இவை அனைத்தும் அப்போஸ்தலர் 2 ம் அதிகாரத்தில் பிரசங்கிக்கப்பட்டது. அப்போஸ்தலர்கள், கிறிஸ்துவின் பாடு, மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலைப் பற்றி பிரசிங்கத்த போது, மூவாயிரம் பேர் விசுவாசித்து இன்னும் என்ன செய்ய வேண்டும் என அறிந்து கொள்ள ஆசைப்பட்டார்கள், அவர்களுக்கு, உங்கள் பாவத்திலிருந்து மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும் என சொல்லப்பட்டது. சுவிசேஷத்தின் பிரசங்கத்தின் மூலம், கர்த்தர் அவர்களை கீழ்ப்படிய அழைக்கிறார். அப்போஸ்தலர் 2 ம் அதிகாரத்தில் மூவாயிரம் பேர் கர்த்தரால் அழைக்கப்பட்டார்கள், கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தார்கள். அவர், அவர்களை இரட்சித்து, தமது சபையில் சேர்த்துக் கொண்டார்.

இரண்டாவதாக, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளும் யாவரும் இரட்சிக்கப்படுவார்கள் என்று யோவேலால் முன்னுரைக்கப்பட்டது. பேதுருவும், மற்ற அப்போஸ்தலர்களும், ஜனங்களைப் பார்த்து, அந்த நாளிலே அது நிறைவேறியதாக சொன்னார்கள். இரட்சிக்கப்படும்படி கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுதல் என்றால் என்ன ? அநேகர், கர்த்தரிடம் இரட்சிப்பை கேட்பதே அவரை தொழுது கொள்ளுதல் என்கிறார்கள். வேறு வார்த்தைகளில் சொன்னால், அவரிடம் நாம் ஜெபம் பண்ண வேண்டும் என்கிறார்கள். ஆனால், இரட்சிப்போடு சம்பந்தப்படுத்தி ஜெபம் எங்காவது பேசப்பட்டிருக்கிறதா? கிறிஸ்து பிரசங்கிக்கப்பட்டு அவர்கள் இருதயத்தில்

குத்தப்பட்டவர்களாகி அல்லது கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டு பின், அவர்கள் என்ன செய்ய வேண்டும் என கேட்டார்கள். பேதுரு அவர்களிடம், நீங்கள் ஒவ்வொருவரும் மனந்திரும்பி, பாவ மன்னிப்புக்காக இயேசுவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொன்னார். வசனம் நமக்கு சொல்கிறது மூவாயிரம் பேர் இதைச் செய்து, கர்த்தரால் சபையில் சேர்க்கப்பட்டார்கள் என்று. வேறு வார்த்தையில் சொன்னால், அவருக்குக் கீழ்ப்படிந்தால் அவர் நம்மை இரட்சிப்பார் என்று சொல்லியிருக்கிறார், "விசுவாசமுள்ளவனாகி, ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படுவான்" என்றார் (மாற்கு 16:16) என்று நாம் வாசிக்கிறோம். ஆகவே ஒருவன் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுதல் என்றால் அவருக்குக் கீழ்ப்படிதலாகும். அப்படி கீழ்ப்படிந்து வாக்குதத்தத்தை நிறைவேற்றும்படி நாம் அவரை வேண்டிக்கொள்ளுதல் எனவும் பொருள்படும். அவர் நிச்சயமாகவே அப்படி நமக்குச் செய்வார்.

இன்னும், ரோமர் புத்தகத்தில் நாம் வாசிக்கையில், "ஆதலால், கர்த்தருடைய நாமத்தை, தொழுதுகொள்ளுகிற எவனும் **இரட்சிக்கப்படுவான்,** அவரை விசுவாசியாவர்கள் எப்படி அவரை தொழுது கொள்ளுவார்கள்? அவரைக்குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே. **ஆனாலும் சுவிசேஷத்திற்கு எல்லாரும் கீழ்ப்படியவில்லை.** அதைக்குறித்து ஏசாயா : கர்த்தாவே, எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார் என்று சொல்லுகிறான், ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும். இப்படியிருக்க, அவர்கள் கேள்விப்படவில்லையா என்று கேட்கிறேன் ; கேள்விப்பட்டார்கள்; அவைகளின் சத்தம் பூமியெங்கும் அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசிவரைக்கும் செல்லுகிறதே" என்றார் (10:13-18) இங்கே, நாம் கவனித்தால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுவதோடு "இரட்சிப்பும், கீழ்ப்படிதலும்" இணைக்கப்பட்டு பேசப்பட்டிருக்கிறது. ஆகவே, நாம் கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்ள வேண்டுமானால், அவருடைய வசனத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும்.

**J.C. Choate**

**J.C. சோட்**

# எக்லீசியா வேதாகமக் கல்லூரி

மாணவர் சேர்க்கை அறிவிப்பு

# EKKLESIA BIBLE COLLEGE

P.O. Box 27, Kangayam - 638 701. India

**STUDENTS ADMISSION NOTIFICATION**

புதிய ஏற்பாட்டு உபதேசத்தில் முழு நம்பிக்கையும், நற்செய்தியை நானிலம் எங்கும் எடுத்துச் செல்ல வேண்டுமென்பதில் இணையில்லா ஈடுபாடும் கொண்ட வாலிபர்கள் மற்றும் மணமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் உடனடியாக வரவேற்கப்படுகின்றன.

காலம் : 3 வருடம் (செமஸ்டர் முறை)
Duration : **3 Years (Semester System)**

கல்வித்தகுதி : **+2 தேர்ச்சி (அல்லது) பட்டப்படிப்பு**
Qualification : **+2 Pass (or) Any Degree**

பட்டம் : **வேதயியலில் இளங்கலை பட்டம்**
Degree : **B.B.S. (Bachelor of Biblical Studies)**

தகுதியுள்ளவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும்.

**விபரங்கட்கும், விண்ணப்பங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :**

இயக்குநர்

**எக்லீசியா வேதாகமக் கல்லூரி**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701. இந்தியா

✆ 04257 - 230030, 230603 Cell : 98427 - 30382

**குறிப்பு : மணமானவர்களுக்கு அதிகபட்ச வயது 35**

பெண்கள் பகுதி

# புத்தியுள்ள ஸ்திரீ

கிறிஸ்துவுக்குள் அருமையானவர்களே, தேவன் கிருபையாய் காட்டிக்கொடுத்த இப்புதிய ஆண்டிற்குள் அடியெடுத்து வைத்திருக்கும் சிலாக்கியத்தை பெற்றிருக்கிறோம். பெண்களுக்கான ஆலோசனைகளை நாம் வேதாகமத்தின் துணை கொண்டு பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஏதோ, கட்டுரையை வாசிப்பதோடு நின்று விடாமல் அதன்படி வாழவும், நம் குடும்பத்தாரையும் வசனம் சொல்கிறபடி வாழவைப்பதும் நம்மேல் விழுந்த கடமையாகும். ஒரு குடும்பம் ஆவிக்குரிய, சரீர நன்மைகளால் நிரப்பப்படவேண்டுமென்றால் அது முழுக்க, முழுக்க அக்குடும்பத்தில் உள்ள பெண்ணின் கையில் தான் இருக்கிறது. வேதாகமத்தில் தொடக்க முதல், இறுதி வரை நிறைய பெண்களின் பெயர்கள், செயல்பாடுகள் இடம் பெற்றுள்ளது. நீதி மொழிகளில் ஞானி சாலமோன் பல்வேறு விதமான பெண்களைப் பட்டியலிடுகிறார். அதில் 14 ஆம் அதிகாரம் முதல் வசனத்தில் **"புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள். புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை இடித்துப் போடுகிறாள்"**. (நீதி 14:1) என்று வாசிக்கிறோம். வீடு கட்டப்படுவதற்கும், இடித்துப்போடப்படுவதற்கும் அங்கே பெண் காரணமாக்கப்படுகிறாள். **"கர்த்தர் வீட்டை கட்டாரகில் அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா"** என்று சங்.127:1 ல் வாசிக்கிறோம். புத்தியுள்ள ஸ்திரீயும் வீட்டை கட்டுகிறதுடன், கர்த்தரும் வீட்டைக் கட்டுகிறார் என்றால், இதில் உள்ள உண்மையை நாம் நன்றாக விளங்கிக் கொள்ளவேண்டும். வீடு என்றால் ஏதோ கட்டிடத்தை குறிப்பிட்டுப் பேசப்படும் ஒன்றல்ல. வீட்டில் உள்ள மக்களை, அதாவது குடும்பத்தைப் பற்றி பேசுகிறது.

ஒரு ஸ்திரீ எவ்வாறு புத்தியுள்ள ஸ்திரீயாக மாறமுடியும் ? அவள் பெற்ற பட்டங்களை வைத்தா ? அவளின் அழகை வைத்தா ? அவள் குடும்ப அந்தஸ்தை வைத்தா ? இல்லை. மாறாக, அவள் தேவனையும், இயேசு கிறிஸ்துவையும், ஆவியானவர் வெளிப்படுத்தியுள்ள வேத வசனங்களையும் எந்த அளவு அறிந்து வைத்துள்ளாள் என்பதைப் பொறுத்தே புத்தி உள்ளவள் அல்லது புத்தி அற்றவள் என்று பிரித்துப் பேசப்படுகிறாள். **வேதாகமம் சொல்லுகிறபடி** ஒரு ஸ்திரீ என் வீட்டைக் கட்டும்போது அது **கர்த்தரால் கட்டப்படுகிறது**. வேதத்தின் படி ஒரு ஸ்திரீயானவள் மூன்று விதத்தில் கடமைப்பட்டுள்ளாள் அல்லது செயல்பாடுடையவளாய் இருக்கிறாள்.

1. தனக்கும் தேவனுக்கும் இடையே உள்ள செயல்பாடு
2. தனக்கும் தன் கணவனுக்கும் இடையே உள்ள செயல்பாடு
3. தனக்கும் தன் பிள்ளைகளுக்கும் இடையே உள்ள செயல்பாடு

இந்த மூன்றிலும் அவள் **வேதம் சொல்லுகிறபடி** வாழ்ந்து விட்டால், உண்மையிலுமே அவள் **புத்தியுள்ள ஸ்திரீதான்.** கட்டாயம் தன் வீட்டை

கட்டிவிடுவாள். மேற்சொன்ன காரியங்களில் அவள் தவறு செய்தாளென்றால் தன் சொந்த கையினாலேயே அதை இடித்துப் போடும் துர்ப்பாக்கியத்தையும் தானே வரவழைத்துக் கொள்கிறாள். இதில் முதலாம் செயல்பாட்டில் ஒரு பெண் குறை வைத்து விட்டால், மீதி இரண்டிலும் அவள் தோற்றுப்போவது நிச்சயம். தனக்கும், தேவனுக்குமிடையே குறையை வைத்துக் கொண்டு குடும்பத்தையும் கட்ட முடியாது. கணவனுக்கும், பிள்ளைகளுக்கும் உண்மையாயும் இருக்க முடியாது.

உலகெங்கிலும் இருக்கும் கிறிஸ்துவின் சபைகள் கட்டப்படாமல் இருப்பதற்கும், வளர வேண்டிய அளவு வளராமல் இருப்பதற்கும் காரணம் சபையில் இருக்கும் பெண்கள் தேவனோடும், தேவனுக்கடுத்த காரியங்களிலும் வேத வசனம் சொல்லுகிறபடி வாழாததேதான். **தேவன், கணவன், பிள்ளைகள்** இந்த மூன்று சம்பந்தங்களிலும் தோல்வியடைந்து எல்லாவற்றையும் தன் சொந்த கைகளினால் இடித்து, அழித்துப் போட்ட பெண்ணுக்கு தலைசிறந்த உதாரணம் I ராஜ : 16:31 ல் அறிமுகமாகும் யேசபேல் தான். ஏவாளின் வழி வந்த பெண்களிலேயே திருத்த முடியாத, அநீதியும், மனசாட்சி என்பது மருந்துக்குக்கூட இல்லாத கொடூரத்தன்மை கொண்டவள் யேசபேலைத் தவிர யாரும் இருக்க மாட்டார்கள். அவளோடு போட்டியிடக்கூடிய ஒரு ஆள் யாராவது இருக்கிறார்களா? என்றால் அது அவள் மகள் **அத்தாலியா** தான்.

முதலாவதாக இந்த யேசபேல் தேவமனிதனாகிய எலியாவை திண்டாட வைக்கிறாள். தேவனுடைய பிள்ளைகளை துன்புறுத்துவதும், தேவனைத் துன்புறுத்துவதும் ஒன்றுதான்.

I ராஜா 18:4 ல் **"யேசபேல் கர்த்தரின் தீர்க்கதரிசிகளை சங்கரிக்கிற போது ..."**

I ராஜா 18:13 ல் **"யேசபேல் கர்த்தரின் தீர்க்கதரிசிகளைக் கொன்று போடுகிறபோது"**

I ராஜா 19:2 ல் யேசபேல் எலியா தீர்க்கனிடம் சபதம் போடுகிறாள். **"போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும்"** என்று மகா தீர்க்கன் மனமுடைந்து சொல்லுமளவுக்கு இந்த யேசபேல் காரணமாயிருக்கிறாள். யெகோவா மெய்யான தேவன் என்பதை ஏற்றுக் கொள்ள மறுக்கிறாள். இன்றைக்கு கிறிஸ்தவத் தாய்மார்களாகிய நம் நிலை என்ன? நமக்கும் தேவ தாசர்களுக்கும் உள்ள உறவு எப்படி இருக்கிறது?

**இரண்டாவதாக** இந்த யேசபேல் தன் கணவனோடு தன் உறவை எப்படி வைத்துக்கொண்டாள் என்று பார்ப்போம். இவள் கணவன் பெயர் ஆகாப். (I ராஜா 21 : 1-16) வசனங்களில் நாபோத்தின் திராட்சத் தோட்டத்தை ஆகாப் எவ்வாறு அபகரித்துக் கொண்டான் என்ற சம்பவம் இடம் பெற்றுள்ளது. யேசபேல் தன் வஞ்சக புத்தியோடு தந்திரம், பொய் இவற்றையும் காட்டி நல்லவனாகிய நாபோத்தை கொன்று போடுகிறாள். **"தன் மனைவியாகிய யேசபேல் தூண்டிவிட்டபடியே, கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய,**

**தன்னை விற்றுப்போட்ட ஆகாபைப்போல ஒருவனுமில்லை"**. (Iராஜா 21:25). தன் கணவனின் பெலவீனத்தை தனக்கு பலனாக எடுத்துக் கொண்டாள். தான் என்ற அகங்காரம் அவளுக்கு மேலோங்கி இருந்தது. நியாயத்துக்காக போராட வேண்டிய இராஜாவாகிய ஆகாப், தன் மனைவியின் தந்திரமான ஆலோசனைக்கு அடிமையாகி நீதியை விற்றுப்போட்டான். இன்றைக்கும் அநேக ஸ்திரீகள் தங்கள் கணவன்மார்களை தேவனுக்கடுத்த காரியங்களில் தைரியமாக எழுந்து செயல்பட முடியாமல் தடுத்து விடுகின்றனர். சத்தியத்தை, சத்தியமாக பேச விடாமல் செய்து விடுகின்றனர்.

**மூன்றாவதாக** இந்த யேசபேல் தன் பிள்ளையாகிய அத்தாலியாவோடு எப்படி தாக்கத்தை ஏற்படுத்தினாள் என்று பார்ப்போம். பாபிலோனிய சாம்ராஜ்யத்தின் மகா தீர்க்கதரிசியாகிய எசேக்கியேலின் புத்தகம், 16 ஆம் அதிகாரம் : 44 ஆம் வசனத்தில் கூறியுள்ளபடி "..........தாயைப்போல் மகள் ................." என்ற பழமொழிக்கு பொருத்தமாக இவர்கள் வாழ்க்கையும் இருந்தது. பிரியமானவர்களே, நம்முடைய ஒவ்வொரு செயலும் நம் பிள்ளைகளில் பிரதிபலிக்கும் என்பதை மறந்துவிடக்கூடாது. அத்தாலியா தன் தாயிடமிருந்து சில காரியங்களை **பார்த்ததுமில்லை, கேட்டதுமில்லை, தன் தாய் செய்ததுமில்லை,** இவளுக்கு **சொன்னதுமில்லை.**

**பார்த்திராதது** : மோசேயின் பிரமாணங்களை தன் தாய் வாசித்து அத்தாலியா பார்த்ததேயில்லை.

**கேட்காதது** : அற்புதமான மனிதர்களாகிய ஏனோக்கு, நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, மோசே, சாமுவேல், தாவீது போன்ற எபிரெய விசுவாச வீரர்கள் பற்றிச் சொல்லி இவள் கேட்டதுமில்லை.

**சொல்லாதது** : திஸ்பியனாகிய எலியா தீர்க்கதரிசியைப் பற்றி ஒருவார்த்தை கூட தன் மகளுக்கு யேசபேல் சொல்லவில்லை.

**செய்யாதது** : நன்மை, தேவகாரியங்கள், ஈவு, இரக்கம், அன்பு போன்ற நல்ல காரியங்களை இவள் செய்ததே இல்லை.

இப்படி எந்த காரியத்திலும் முன் உதாரணமாய் இல்லாத ஒரு தாய் எப்படி தன் பிள்ளையை மட்டும் நல்லவளாக வளர்ப்பாள், தன் குடும்பத்தை கட்டுவாள் என்று எதிர்பார்க்கமுடியும்? அத்தாலியாளும் தன் கணவனாகிய **யோராமை** கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்ய வைக்கிறாள் (II நாளாகமம் 21:5,6).

தன் பொல்லாத குணத்தால் தேவனோடு எதிர்த்து, தன் கணவனையும் நீதியிலிருந்து பிரளச் செய்து தன் மகளையும் துன்மார்க்கமாய் வளர்த்து தன் சொந்த வீட்டை தன் சொந்த கைகளினால் இடித்துப் போட்ட இந்த யேசபேலைப் போல புத்தியற்ற ஸ்திரீகளாய் நாம் இருக்கக்கூடாது.

சரி, அடுத்ததாக, புதிய ஏற்பாட்டில் சென்று பார்க்கும்போது, **ஆக்கில்லாவின் மனைவி பிரிஸ்கில்லா** (அப் : 18:2) அப்பொல்லோவை தங்களோடு சேர்த்துக் கொண்டு ஊழியம் செய்தார்கள் என்று வாசிக்கிறோம். இந்த பிரிஸ்கில்லா ஊழியத்தில் தன்னை மிகவும் ஈடுபடுத்திக் கொண்டாள். தன் கணவனோடு சேர்ந்து காரியங்களை செய்கிறாள். புதிய ஏற்பாட்டில் நமதாண்டவர் இயேசு கிறிஸ்துவிற்கு அடுத்தபடியாக பேசப்படும் அப்போஸ்தலனாகிய பவுலையே தங்கள் குடும்பத்தோடு சேர்த்துக் கொண்டு ஊழியத்தை தாங்கினார்கள் என்றால் அதற்கு காரணம் தேவ பயமுள்ள இருதயத்தை கொண்டிருந்த பிரிஸ்கில்லாவாகத்தான் இருந்திருக்க முடியும். மாத்திரமல்ல அப்பொல்லோவிடம் சாதுரியமாகப் போதித்து அவனை கிறிஸ்தவனாக மாற்றினார்கள் (அப் 18:26)

கிறிஸ்துவுக்குள் அருமையானவர்களே, நாமும் இந்த பிரிஸ்கில்லாவைப் போன்று ஊழியர்களை தாங்குவதிலும், ஊழியர்களை உருவாக்குவதிலும் நம் **கணவனோடு சேர்ந்து** வேலை செய்ய வேண்டும்.

இறுதியாக, தன் பிள்ளையை தேவனுக்காக வளர்த்து அவனை ஊழியனாக்கி தன் கடமையை உண்மையாய் நிறைவேற்றிய தாயாகிய **ஐனிக்கேயாளை** நமக்கு முன்மாதிரியாக எடுத்துக் கொள்வோம். விசுவாசத்தில் தான் பெற்ற உத்தம குமாரானாகிய தீமோத்தேயுவின் விசுவாசத்தை பாராட்டும் போது பவுல் இவ்வாறு கூறுகிறார். **"அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும், உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது ; அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்"**. (2 தீமோ 1:5). ஐனிக்கேயாள் யார் என்பதை பவுல் நமக்கு இங்கு அறிமுகப்படுத்தி வைக்கிறார். பவுலோடு சேர்ந்து ஊழியம் செய்து, பவுலுக்கு தோள் கொடுத்த இளைஞனை உருவாக்கிய பெருமைக்குரிய தீமோத்தேயுவின் தாய் தான் இந்த ஐனிக்கேயாள். இந்த தாய் தன் விசுவாசத்தை தன் தாயாகிய லோவிசாளிடம் இருந்து பெற்றுக் கொண்டாள். ஆக வழி,வழியாக விசுவாசம் தொடருகிறதென்றால் அதற்கு தாய்கள் தான் காரணம்.

இன்று அநேகர் தங்கள் விசுவாசத்தை தாங்களே வளரவிடாமல் அழித்துக் கொள்கிறோம். அப்படியே தேவன் மீது கொஞ்சம் விசுவாசமாயிருந்தாலும் அது மாயையான, பொய்யான விசுவாசமாயிருக்கிறது. நிலைமை இப்படியிருந்தால் நாம் எங்கே விசுவாசத்தை தலைமுறைகளுக்கு எடுத்துச் செல்ல முடியும்? தன் பிள்ளையை தேவனுக்காக வளர்த்தியதில் ஐனிக்கேயாளுக்கு பெரும் பங்கு இருந்தது. நாமும் கூட நம் பிள்ளைகளுக்காக உத்திரவாதம் உள்ளவர்களாக இருக்கிறபடியால் ஐனிக்கேயாளைப்போல விசுவாசமுள்ள தீமோத்தேயுக்களை உருவாக்கி, சபையில் ஈடுபடச் செய்து சபையின் வளர்ச்சியில் நம்முடைய பங்கையும் பெற்று, அதன் மூலம் பரலோக பாக்கியத்தை சுதந்தரித்துக் கொள்வோம் !

**R.R. நாயகம்**

வாலிபர் பகுதி

# தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல் ...

"திரை கடல் ஓடியும் திரவியம் தேடு" என்பது நமது முன்னோர்களின் முதுமொழி. இத்தரையில் பிறந்த யாரும் ஒன்றும் கொண்டு வரவில்லை என்றாலும், தரணியில் வாழும்போது செங்குருதி சிந்தி, ஊன் வருத்தி, வெயிலில் வாடி, முதலாளி சொன்னபடி ஆடி, அவன் சொன்னயிடமெல்லாம் ஓடி, ஒத்த மனமுடையவர்களுடன் தொழில் செய்யக்கூடி, சேர்த்துவிடவேண்டும் கோடி என எண்ணம் கொள்ளாத மனிதன் இவ்வையகத்தில் இல்லை என்றால் அது மிகையாகாது என்பது எனது திடமான நம்பிக்கை. வாரிதி கடந்தும் வாழ்வமைய வேண்டும், பிறந்த மண்ணை விட்டு சிறந்த வாழ்க்கை கிடைக்க பறந்து போக நேரிட்டாலும் பரவாயில்லை, பந்தங்கள் எனக்கு வேண்டாம், பழகிய நண்பர்கள் வேண்டாம் எனக்கருதி, ஒரு குருதி தானே எல்லாருக்கும் என சமாதானமும் சொல்லி, இக்குவலயத்து மனிதன் தனக்கு அருள் தேடுகிறானோ இல்லையோ, இவ்வுலகத்து பொருள் தேடுகிறான் என்பது திண்ணம்.

வானில் வாழ்ந்து கொண்டிருந்த ஆதித் திருவார்த்தை, இம்மண்ணில் வாழும் மாந்தர் வாழ்வு செழிக்க, அவர்களைப் போலவே ஊனும், உதிரமும் உருவமும் கொண்டு இலகுமோர் விதத்தில் இவ்வுலகினில் உதித்தார். உதித்த பரம்பொருள் உன்னத உண்மைகளை உதிர்த்தார். அதை நமக்காக யாத்துக்கொடுத்த மருத்துவர் லூக்கா தனது பன்னிரெண்டாம் அத்தியாயத்தில், விண்ணக வித்து விளம்பிய ஓர் உவமையை கூறுகிறார். வித்து கூறிய சத்தான கருத்து யாதெனில், நல்ல நிலத்தில் நன்றாய் விளைந்து, அறுவடை அபரிமிதமாய் நடந்தது. வயலுக்குடையோன், தனக்கு வயதேறி, முதுமை வந்து முடிவு வராதென்று எண்ணி, களஞ்சியம் பெரியதாய்க் கட்டுவேன், ஆத்துமாவே ஆர்ப்பரி என்றான், ஆனால் இறைவனோ இதோ உன் ஆத்துமாவை நான் பறித்தால் இதுவெல்லாம் யார்பறித்துப் போவார்களோ என்றுரைத்தார் என்று உவமையை முடித்த உத்தமர், ஓர் உயரிய உண்மையை பகர்கிறார் பாரீர்! "தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கிறவன் இப்படியே இருக்கிறான் என்றார்." (லூக்கா 12:16-21).

## பொக்கிஷம் சேர்ப்பதெப்படி?

இறைவன் இயேசு இவ்வுலகினில் இருக்கையில், இமையுயர்த்தும் இனிமையான சொற்பொழிவுகளை இயம்பினார் என்பதை விவிலியத்தில் நாம் வாசிக்கையில் அறிந்துகொள்ளலாம். பழைய ஏற்பாட்டின் கடைசி தீர்க்கன் மல்கியா முழங்கிய பின் அசரீரி அமைதலானது, தேவனும், மனிதனும் உறவாடி நாநூறு ஆண்டுகள் உருண்டோடி விட்டது. அந்த சமயத்தில் தான் சற்குணனாகிய சகரியாவுக்குப் பிறந்த யோவான், தேவ அமைதி களைந்து விண்ணவருக்கு வழியை ஆயத்தம் செய்ய பாய்ந்து வரும் காளை போல் சீறிவந்தான், யூதேயா நாட்டு நிலையை மாற்ற ஆலோசனை கூறி வந்தான், தேவ குரல் கேட்க வில்லையே என்ற ஏக்கம் போக்க வனாந்திரமேறி வந்தான்.

ஆயத்தம் செய்கிறவன் ஆற்றோரமாயிருக்கையில் ஆண்டவர் இயேசு அருகினில் வந்து, நீதி நிறைவேற ஸ்நானம் பெற்றார். வானம் திறந்து தந்தை தன் சிந்தை வெளிப்படுத்தினார் இவர் என் நேச குமாரன் என்று. உன்னதரின் ஊழியம், நாற்பது நாள் ஊன் வருத்தி உண்ணாநோன்பு இருந்து அலகையை வென்றபின் வெடித்துக்கிளம்பியது. அப்படிக் கிளம்பிய நமதாண்டவர் குன்றின்மீது அமர்ந்து பொழிவு செய்த கணக்கினை நாம் பார்க்கையில், மண்ணில் சேர்க்கும் மாபெரும் செல்வம் உங்களிடம் சொல்லாமலே செல்லலாம், எண்ணரும் பூச்சிகள் எளிதில் அரிக்கலாம், விண்ணிலே நீங்கள் வியத்தகு செல்வம் சேர்த்தால் குவிந்து, அது குறையாது பெருகும் என்றார் (மத். 6:20)

விண்ணில் சேர்த்துவை பொக்கிஷம் என விந்தை நாதர் விளம்பினார், ஆனால் எப்படி சேர்ப்பது என்பது தானே நமது வியப்புமிகு வினா? அதற்கு பதில் காண முடியாது என கனாவிலும் நினைக்க வேண்டாம்! நமதாண்டவரிடம் ஒருமுறை வாலிபன் வந்து நித்திய ஜீவனை சுதந்தரிக்க என்ன செய்யவேண்டும் என்று கேட்டான் இயேசுவானவரும் சுத்தமான இறை கட்டளைகளை நிறைவேற்று சுத்தி பெறுவாய் என்றார், ஆனால் அவன் வாய் திறந்து அவைகள் எல்லாம் சிறுவயது முதல் கடைபிடிக்கிறேன் என்றான், ஆனாலும் என்னிடத்தில் என்னகுறை என நீர் உரைக்க வேண்டுமென்றான்.

அப்பொழுது அகிலம் படைத்தவர் கூறுவதை கூர்மையாய் கவனியுங்கள், "நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், **உனக்கு உண்டானவைகளை விற்று தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்** என்றார்" (மத் 19:21) வாலிபர்களே! கடல் நடுவே பிளவு ஏற்பட்டதால், டிசம்பர் 26 ம் தேதி அலை வந்து பலபேரை பிணமாக மலைபோல் குவித்து விட்டு சென்றது. அம்மா என்று ஆசையாய் அழைத்த குரல், இன்று அணைந்து

விட்டது. கரையை மீறிய அலைகள் மீளாத் துயரத்தில் நம்மை ஆழ்த்தியது. பலபேர் கை ஏந்தி நிற்கிறார்கள் உதவிக்காக. நீ என்ன செய்யப் போகிறாய் ? பரலோகத்தில் பொக்கிஷம் வேண்டுமா! இப்பொழுது பொக்கிஷமிழந்து, துயரத்தில் அமிழ்ந்து கிடப்போருக்கு உதவிக் கரம் நீட்டு, உன் அன்பை காட்டு ! காட்டுவாயா வாலிபனே!

லூக்கா புத்தகத்தின் 12ம் அத்தியாயத்தில் நாம் நமக்கென்று சேர்த்து வைக்காமல், தேவனிடத்தில் ஐசுவரியமாயிருக்க வேண்டும் என்று இயேசு கூறினார். நாம் அதே அதிகாரத்தின் 33ம் வசனத்தில் பார்க்கையில் "உங்களுக்கு உள்ளவைகளை விற்றுப் **பிச்சைகொடுங்கள்;** பழமையாய்ப் போகாத பணப்பைகளையும் குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்திலே உங்களுக்குச் சம்பாதித்துவையுங்கள்" என்றார். இவ்வசனமும் எதை அறுதியிட்டு கூறுகிறது பார்த்தீர்களா. **பிச்சை கொடுங்கள்** இந்த சிறியருக்கு நீங்கள் எதைச் செய்தாலும் அதை எனக்கே செய்தீர்கள் என்று இயேசுவானவர் கூறியதை நினைவில் கொள்ளுங்கள் (மத். 25:45)

நம்மில் அநேகர் தங்களுக்கு சரிநிகர் சமமானவர்களோடு பழகவும், அவர்களோடு உணவகம் செல்வதும் இவ்வுலகத்து வழக்கம். ஆனால், நமதாண்டவர் கூறியதைக் கவனியுங்கள், "நீ விருந்து பண்ணும்போது ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் அழைப்பாயாக. அப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய்; அவர்கள் உனக்குப் பதில் செய்யமாட்டார்கள்; **நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும் என்றார்.**" (லூக்கா 14:13,14) என்ன புருவத்தை உயர்த்துகிறீர்கள்! ஆம் நாம் ஏழைகளுக்கு இரங்க வேண்டும் ஏன் என்றால் நாம் கர்த்தருக்கே கடன் கொடுக்கிறோம் (நீதி. 19:17)


வாலிபர்களே! இன்னொரு காரியத்தையும் கவனியுங்கள், ஆதித் திருச்சபை சகலத்தையும் பொதுவாக வைத்து அனுபவித்தது என்று படிக்கிறோம். ஒருவருக்கும் ஒன்றும் குறைவில்லை என்றும் படிக்கிறோம். அவர்களின் மாதிரியை நாமும் பின்பற்ற வேண்டும் அதாவது விசுவாசிகளின் குறைகளைத் தீர்க்க வேண்டும். கிறிஸ்தவத்திற்கு எதிராக செயல்பட்ட பவுல், கிறிஸ்துவைப் பிரசங்கிக்க ஆரம்பித்து பதினாலு வருஷம் கழித்து அப்போஸ்தலர்களை பார்த்தபோது, அவர்கள் சொன்னதைக் கவனியுங்கள், **"தரித்திரரை நினைத்துக்கொள்ளும்படிக்குமாத்திரம் சொன்னார்கள்;** அப்படிச் செய்யும்படி அதற்கு முன்னமே **நானும் (பவுலும்) கருத்துள்ளவனாயிருந்தேன்**"(கலா 2:10) என்கிறார். அப்போஸ்தலர்களும் இதற்கு முதலிடம் கொடுத்தார்கள் நாமும் அப்படியே தரித்திரரை நினைப்போம் தேவனிடத்தில் ஐசுவரியவான்களாயிருப்போம்! ஆமென் !!

**ஜே.பிக்கின்ஸ்**




# சிலுவையில் தொங்கின கள்ளன்

எனக்குப் பிரியமான சிறுதம்பி தங்கைகளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவர் இயேசுவின் இனிதான நாமத்தில் வாழ்த்துக்கள். மாதாமாதம் வெளிவரும் கட்டுரைகள் உங்களுக்கு பயனுள்ளதாய் அமைந்திருக்கும் என நம்புகிறேன். இந்த மாதம் நாம் சிலுவையில் இயேசுவோடு மரித்த கள்ளனிடமிருந்து சில பாடங்களை கற்றுக் கொள்ளப் போகிறோம். சரியா?



மனுக்குலத்தின் பாவங்களை மன்னிப்பதற்காக இயேசு சிலுவையில் மரித்தார் என்று நாம் அறிவோம். அப்படி அவர் மரிக்கையில் அவருடன் இரண்டு கள்ளர்களும் மரித்தார்கள்! அப்படித்தானே! **அந்த இரண்டு கள்ளர்களில்** ஒருவன் இயேசுவை இகழ்ந்து பேசினான். ஆனால் சிறிது நேரம் கழித்து மற்றொரு கள்ளன், "நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்" என்று கூறினான். (லூக் 23:42) இயேசு அவனிடத்தில் இரக்கம் கொண்டு "இன்றைக்கு நீ என்னோடு கூட பரதீசிலிருப்பாய்" என்று கூறினார். இயேசு அவனிடம் கூறும்பொழுது, அவன் ஞனாஸ்நானம் பெறவில்லை, என்று சிலர் தவறாக புரிந்து கொண்டு, பரலோகம் செல்லவும், பாவமன்னிப்பை அடையவும் ஞானஸ்நானம் தேவையில்லை என சிலர் கூறுகிறார்கள். இதை நாம் சிந்தித்து பார்க்க வேண்டும்.

ஆனால் அந்தக் கள்ளன் ஒருவேளை ஞானஸ்நானம் பெற்றிருக்கலாம் அல்லவா? யாருக்கு தெரியும். அவன் யூதேயா தேசத்தில் வாழ்ந்ததினாலே, யோவான் ஸ்நானகனைக் குறித்து ஒருவேளை கேள்விப்பட்டு கீழ்ப்படிந்திருக்க வாய்ப்புள்ளது. (மாற் 1:4, யோ 4:1-2) அப்படியிருந்தால் அவன் சிலுவையில் மரிப்பதற்கு முன் தன் பாவங்களை அறிக்கையிட்டிருக்க வேண்டும்.

முக்கியமாக, இங்கு நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால், "அவன் புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்கு கீழ்ப்படியும் கட்டாயத்தில் இல்லை," அதாவது கிறிஸ்துவின் மரணத்திற்குள் ஞானஸ்நானம் பெற வேண்டிய கால கட்டத்தில் அவன் இல்லை. இதை நன்றாக புரிந்து கொள்ள வேண்டும்.

அதைப்போலவே தான், பழைய ஏற்பாட்டு காலத்தில் வாழ்ந்த மோசே, ஆபிரகாம் போன்றவர்கள் யாரும் ஞானஸ்நானம் எடுக்க வேண்டும் என்ற கட்டாயத்தில் இல்லை. அது அவர்களுக்கு அவசியம் இல்லாததாயிருந்தது. அவர்கள் புதிய ஏற்பாட்டு உபதேச காலத்திற்கு முன்பே வாழ்ந்தவர்கள்.

அந்தக் கள்ளனும் மோசேயினுடைய உபதேசத்தின்படியே மரித்தான். அவன் கிறிஸ்துவின் ஞானஸ்நானத்தைப் பெற்றிருக்க முடியாது. ஏனென்றால், "கிறிஸ்து இன்னும் மரணத்தை ருசிபார்க்கவில்லை"

அவன், கிறிஸ்துவுக்குள் அடக்கம் பண்ணப்பட வேண்டுவதில்லை. ஏனென்றால் கிறிஸ்துவே இன்னும் அடக்கம் பண்ணப்படவில்லை (ரோமர் 6:4, கொலோ 2:12)

கிறிஸ்தவமே கிறிஸ்துவின் மரணத்திற்கு பின் எருசலேமில், கி.பி. 30-ல் தான் ஆரம்பிக்கப்பட்டது. (அப்போஸ்தலர் 2 அதி) ஆகவே, அவன், ஒருவன் கிறிஸ்தவனாக மாற, எடுக்க வேண்டிய ஸ்நானத்தை எடுக்க வேண்டிய கால கட்டத்தில் வாழவில்லை, அதற்கு முன்னமே மரித்துவிட்டான்

எனவே, பிற சபையார் கூறும் காரியங்களை நாம் சிந்தித்துப் பார்த்து சரியான வேத விளக்கத்தை தேடவேண்டியது அவசியம். தேவன் இந்தக் கள்ளனைக் கொண்டு சில "உண்மையான", "தெளிவான" பாடங்களை கொடுத்தார். நாம் சிறு பிள்ளைகளாய் இருக்கும்போதே, இப்படிப்பட்ட உண்மைகளைத் தெரிந்து கொள்வது, பின்னாளில் நாம் நல்ல கிறிஸ்தவர்களாக மாற, வாழ உதவி செய்யும். அப்படித்தானே.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**R. Abel Rodger Nayagam**

# யூதா ஒரு கண்ணோட்டம்

ஆசிரியர் : **இயேசுவானவரின் சகோதரனாகிய யூதா**

காலம் : **கி.பி. 66-80**

## இந்நூல் பற்றி

a) யூதா அல்லது யூதாஸ் என்ற பெயர் கொண்டவர்கள் புதிய ஏற்பாட்டில் அநேகர் இருக்கிறார், அதில் கிறிஸ்துவின் அப்போஸ்தலரும் இரண்டுபேர். (லூக்கா 6:13-16)

b) இந்நூலின் ஆசிரியர் தன்னை யாக்கோபுவின் சகோதரன் என்று அழைப்பதிலிருந்தே அவர் மாம்சத்தில் இயேசுவின் சகோதரனாகவும் இருக்கிறார். (மத் 13:55, 56; மாற். 6:3; கலா 1:19)

c) யூதாவும் இயேசுவின் மற்ற சகோதரர்களும் அவருடைய உயிர்த்தெழுதல் வரை அவரை விசுவாசிக்கவில்லை. (யோவா.7:1-5; அப்.1:14)

d) ஒரு விசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நாம் தைரியமாக போராட வேண்டும் என்பதற்காக இந்நூல் எழுதப்பட்டது. (யூதா 3)

e) பேதுரு ஆசிரியர் எழுதின இரண்டாம் நூலுக்கும் இந்நூலுக்கும் அநேக ஒற்றுமைகள் இருப்பதை நாம் காணலாம்.

## இந்நூலின் செய்தி

1. பலவிதமான விசுவாசம் இல்லை, ஒன்றே ஒன்று தான் (யூதா 3எபே. 4:5)
2. கள்ளப்போதகர்கள் உண்மையுள்ளவர்களை தங்கள் வசமாக இழுக்கும் அபாயம் எப்பொழுதும் உண்டு (யூதா. 4; மத்.7:13-23; அப்.20:29-31)
3. தேவனுடைய வழியை விட்டு விலகிப் போகிறவர்களுக்கு நிச்சயம் தண்டனை உண்டு.

# விசுவாசத்தின் அடிப்படைகள்

கடந்த மாதம் நாம் 2ம் பாடத்தை படிக்க ஆரம்பித்தோம். **ஆதியிலிருந்தே மனிதனுக்கு இருக்கும் பிரச்சினை அவனுடைய பாவம்; அதற்கான தேவ திட்டம் - அவருடைய நேச குமாரனுக்குள், இயேசு கிறிஸ்துவுக்குள் நிறைந்திருக்கும் அவருடைய அபரிதமான அன்பு.** பாவம் என்பது தேவன் தடை செய்வதை செய்வதும், அவர் செய்யச் சொல்லியிருப்பதை செய்யாமல் இருப்பதே என்று வேத வாக்கியத்தில் நாம் படித்தோம். பாவத்தின் சரித்திரத்தை திரும்பிப்பார்க்க நாம், ஏதேன் தோட்டத்திற்கும், நோவாவின் காலத்திற்கும் சென்றோம்.

சோதோம், கொமோரா பற்றி தேவ விவரிப்பை நாம் பார்த்து அந்த படிப்பைத் தொடருவோம், "சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்கு முன்பாக மகாபாவிகளுமாய் இருந்தார்கள்" என்று தேவன் சொன்னார். அடுத்ததாக, "பின்பு கர்த்தர் சோதோம் கொமோராவின் கூக்குரல் பெரிதாயிருப்பதினாலும் அவைகளின் பாவம் மிகவும் கொடிதாயிருப்பதினாலும்" (ஆதி. 18:20) என்று வாசிக்கிறோம். தேவன் அவர்களுடைய **பாவத்தை மிகவும் கொடிதாயிருந்தது** என்று வர்ணிக்கிறார். நாம் 2 பேதுரு 2:7,8ல் வாசிக்கையில் நீதிமானாகிய லோத்து, "காமவிகார நடக்கையில்" வருத்தப்பட்டு, "அக்கிரம கிரியைகளை" கேட்டு, கண்டு இருதயத்தில் இவ்விரண்டு பட்டணத்திற்காக வாதிக்கப்பட்டான் எனக் காண்கிறோம்.

அடுத்து, நியாயாதிபதிகளின் காலத்தைப் பற்றி சிந்திப்போம், "அந்நாட்களில் இஸ்ரவேலிலே ராஜா இல்லை, அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிப்போனபடி செய்து வந்தான்" (நியாயாதி. 17:6) இன்றைக்கு இருக்கிற அநேகரைப் போல இருக்கிறதல்லவா? அவனவன் தன் **தன் பார்வைக்கு** சரியானதை செய்கிறான். **தேவன்** தன் வார்த்தையில் எது சரி என்று சொல்லியிருக்கிறாரோ அதை செய்ய அவர்களுக்கு மனதில்லை. அதற்கு மாறாக **அவர்கள்** பார்வைக்கு சரியானதை செய்தார்கள்.

பிரிவுபட்ட ராஜ்ஜியத்தின் போது இருந்த இஸ்ரவேலர்களை நாம் பார்த்தால், அவர்கள் தேவனை விட்டுவிட்டார்கள். இந்த ஜனங்கள், மனித பெலத்தை நாடினார்களே அல்லாமல் தேவனை நாடவில்லை. இத்தோடு, அவர்கள் அந்த தேசத்து விக்கிரகங்களை, பொய்யான தேவர்களை

வணங்கினார்கள், அவர்களுடைய பாவமான பழக்கங்களை தாங்களும் செய்தார்கள். ஆக, மனித குலத்தின் வரலாற்றில், தேவனுடைய வார்த்தையையும் அவர் வேதாகமத்தில் சொன்ன கட்டளைகளையும் மீறியே மனிதன் தேர்ந்தெடுத்திருக்கிறான்.

## III நம்முடைய வாழ்க்கையில் பாவம் எப்படி கிரியை செய்கிறது?

முதலாவதாக, ஏதேன் தோட்டத்தில் அது எப்படி செயல்பட்டது என்பதைப்பார்ப்போம். "அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று சொல்லி ....." (ஆதி. 3:6) இங்கே, ஆதாமுக்கும், ஏவாளுக்கும் புசிக்கக் கூடாது என்று கட்டளையிட்டிருந்த விருட்சத்தை முதல் மனுஷியாகிய ஏவாள் எப்படிப் பார்த்தாள் என எழுதிக் கொடுத்திருக்கிறார். அவள், "அதை பார்வைக்கு இன்பமும்", "புத்தியை தெளிவிக்கிறதற்கும்", "புசிப்புக்கு நல்லதும்" என்று கண்டாள். ஆகவே, அந்த விருட்சத்தின் கனியை எடுத்து புசிக்க தீர்மானித்தாள். அவள் அதில் கொஞ்சத்தை ஆதாமுக்கு கொடுத்தாள். அவன் அதை சாப்பிட தீர்மானித்தான். அப்படி செய்ததால், தேவ கட்டளையை மீறி ஆதாமும், ஏவாளும் பாவம் செய்தார்கள்.

இரண்டாவதாக, " **மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய** உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்" (1யோவா 2:16). தேவன் இவ்வுலகத்தில் தன் சித்தத்திற்கு எதிரான மூன்று காரியங்களை இங்கு வகைப்படுத்துகிறார். இந்த காரியங்களைத் தான் சத்தான் பயன்படுத்தி நம்மை பாவம் செய்யத் தூண்டுகிறான்.

மூன்றாவதாக, ஏவாளை சோதிக்க அவன் இதே ஆயுதங்களை பயன்படுத்தினான் என்பதை கண்டறிய, ஆதி. 3:6 க்கும், 1 யோ 2:16 க்கும் உள்ள ஒற்றுமையின் பட்டியலைப் பாருங்கள்.

| ஆதி . 3:6 | 1 யோ. 2:16 |
|---|---|
| ஏதேன் தோட்டம் | உலகமும், உலகத்தில் உள்ளவைகளும் |
| புசிப்புக்கு நல்லது | மாம்சத்தின் இச்சை |
| பார்வைக்கு இன்பம் | கண்களின் இச்சை |
| புத்தியை தெளிவாக்கும் | ஜீவனத்தின் பெருமை |

நான்காவதாக,. நாம் யாக்கோபு நிருபத்தில் வாசிக்கையில், "சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று

சொல்லாதிருப்பானாக; தேவன் பொல்லங்கினால் சோதிக்கப் படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல, அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான், பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும் போது, மரணத்தைப் பிறப்பிக்கும்", (யாக் 1:13-15) என்று பார்க்கிறோம். நீங்களும் நானும் சோதிக்கப்படுகையில், தேவன் என்னை சோதிக்கிறார் என்று சொல்லக்கூடாது. ஏன் என்றால், தேவன் யாரையும் பொல்லாங்கினால் சோதிப்பவர் அல்ல.

## IV <u>பாவத்தின் விளைவு என்ன?</u>

இக்கேள்விக்கான தேவ பதிலை நாம் பார்க்க, வேத வசனங்களை கவனிப்போம். முதலாவதாக; நாம் ஏசாயாவில் படிக்கிறோம், "இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்கு கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை. கேட்கக் கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை, உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது (59:1,2) என்று. இஸ்ரவேலின் பாவத்தின் விளைவு என்ன? அது, அவர்களை தேவனிடத்திலிருந்து பிரித்திருக்கிறது! அவர்களுக்கு செவிகொடாதபடி அது அவர்களின் முகத்தை மறைத்திருக்கிறது. நம்முடைய பாவமும் இதே விளைவைத்தான் தருகிறது.

இரண்டாவதாக, யாக்கோபு 1:15ம் வசனத்தின்படி மன்னிக்கப்படாத பாவம் மரணத்தை பிறப்பிக்கிறது, அதாவது தேவனிடத்திலிருந்து பிரிவு.

மூன்றாவதாக, ரோமர் புத்தகத்தில், "பாவத்தின் சம்பளம் மரணம்" என்று வாசிக்கிறோம் (6:23) நாம் பாவ வாழ்க்கை வாழ தீர்மானித்தால் அதின் சம்பளத்தைப் பெறுவோம். அதாவது, நாம் மரணத்தைப் பெற்றுக் கொள்ளுவோம்.

நான்காவதாக, யோவான் சுவிசேஷத்தில் நாம் பார்க்கையில், "நான் போகிறேன், நீங்கள் என்னைத்தேடி உங்கள் பாவங்களிலே சாவீர்கள் ...." (8:21) இயேசு இரட்சகர் சொல்லுகிறார், நாம் நமது பாவத்தில் மரித்தால் அவர் போயிருக்கிற பரலோகத்திற்குப் போக முடியாது.

இந்த வேத வாக்கியங்களை நாம் ஆராய்ந்து பார்க்கையில், பாவம் நம்மை தேவனிடத்திலிருந்து பிரிக்கிறது என்பது தெளிவாகிறது. நாம் அந்த பாவத்திலேயே சரீரத்தில் மாரித்தால், தேவனை விட்டு நித்தியத்திற்கும் பிரிக்கப்படுவோம். அவர் பரலோகில் இருப்பதால், மன்னிக்கப்படாத பாவம் நம்மை நரகத்தில் கொண்டு போய் சேர்க்கும்.

ஆக, இதுவரைக்கும், வேதாகமத்தின்படி பாவம் என்றால் என்ன? பாவத்தின் வரலாறு, பாவம் எப்படி கிரியை செய்கிறது, பாவத்தின் விளைவு ஆகியவைகளை குறித்து நாம் படித்திருக்கிறோம்.

## V மனிதனின் பிரச்சினைக்கு தேவனின் பதில்

முதலாவதாக, மனிதனின் பாவப் பிரச்சனைக்கான தீர்வை தேவன் பல காலங்களுக்கு முன்னே அறிவித்தார். ஏசாயா 53ம் அதிகாரத்தில் நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார், நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் (வசனம் 5) நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார் (வசனம் 6) அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்; பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார் (வசனம் 12) என்று வாசிக்கிறோம்.

ஏசாயா 53ம் அதிகாரம் வேதாகமத்தில் மிக சிறந்த ஒரு பகுதியாக திகழ்கிறது. தேவன், தனது நேச குமாரனாக இருக்கிற இயேசு கிறிஸ்துவின் சுயநலமற்ற பலியைப் பற்றி அந்த அதிகாரத்தில் கூறுகிறார். அதுவும், இந்த மற்றும் அநேக ஆச்சரியமான தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றும்படி இயேசு இப்பூமிக்கு வருவதற்கு 700 ஆண்டுகளுக்கு முன்னமே இதை எழுதிக் கொடுத்துள்ளார். இந்த தீர்க்கதரிசனங்கள் மிக உறுதியானவை. ஏனென்றால் தேவன் அது நடந்தது போல பாவித்து இங்கே பேசுகிறார்.

இங்கே, இயேசுவானவர், **நமது** மீறுதலுக்காக காயப்படுவார் என்று தேவன் சொன்னார். “காயப்படுவார்” என்று மொழி பெயர்க்கப் பட்டிருக்கும் வார்த்தைக்கு உருவக் குத்தப்படுதல் என்று பொருள். ஆகவே, இயேசுவானவர் உருவக்குத்தப்படுவதை பல காலத்திற்கு முன்னே தேவன் இங்கே கூறுகிறார். உண்மையில், நமது பாவத்திற்காக அவர் சிலுவையில் அறைப்பட்டார்.

இயேசு **நமது** அக்கிரமங்களினிமித்தம் நொறுக்கப்பட்டார். அவர் ஒரு பாவமும் செய்யாதபோதும், நமக்கு சமாதானம் உண்டு பண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது, நாம் வழிதப்பி திரிந்து, அவனவன் சொந்த வழியில் போனதால், தேவன் நமது அக்கிரமங்களை அவர்மீது சுமத்த

சித்தமானார். சிலுவைக்கு போகும் முன்னே, மிகவும் வலிதரக்கூடிய சவுக்கடியை அவர் தாங்கினார். நமது பாவங்களினிமித்தம் அதை தாங்கினார். அவர் அப்படி செய்ய மனதுடையவராக இருந்ததால், நாம் ஆவிக்குரிய ரீதியில் குணமடைகிறோம்.

நம்முடைய அன்பின் இரட்சகர் அந்த கொடூரமான சிலுவையில் "ஆத்துமாவை மரணத்தில் ஊற்றினார்." அவர், இரு கள்ளர்களுக்கு மத்தியில் அறையப்பட்டதால் அக்கிரமக்காரர்களில் ஒருவராய் எண்ணப்பட்டார். நம் ஒவ்வொருவருடைய பாவத்தையும் சிலுவையில் சுமந்தார், அது மாத்திரமல்ல, பாவிகளுக்காக அவர் மன்றாடினவருமாய் காணப்பட்டார்.

இந்த அதிசயமான தீர்க்கதரிசனம், வேதாகமம், தேவ வசனம் தான் என்ற விசுவாசத்தை நம்மில் காட்ட வேண்டும். பிதாவின் மேலும், அவருடைய குமாரன் மேலும் நாம் கொண்டிருக்கும் அன்பும் அதிகரிக்க வேண்டும்.

மனிதனின் பாவ பிரச்சினைக்கு தேவன் பதிலை தருவதற்கு எது அவருக்கு ஊக்குவிக்கும் சக்தியாக இருந்தது. யோவான் 3:16ன் படி அன்பு தான் அந்த சக்தி, அவருடைய ஒரே பேரான குமாரனை தரும் அளவு அவர் நம்மை நேசித்திருக்கிறார். இயேசுவின் மீது விசுவாசம் வைக்கிற யாரும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படி அப்படி செய்தார். தேவனுடைய மகத்துவமான தீர்க்கதரிசனம் முதல் நூற்றாண்டில் நிறைவேறியது. மத்தேயு 1:20,21ன்படி, யோசேப்புக்கு தேவதூதன் சொப்பனத்தில் வந்து, மரியாள் ஒரு குமாரனைப் பெறுவாள் என்று சொன்னான். அவர் தமது ஜனங்களின் பாவங்களை சுமந்து தீர்க்கிறபடியால் அவருக்கு இயேசு என்று பெயர் வைக்கும்படி சொன்னார். மத்தேயு 2:1ன் படி தீர்க்கதரிசனம் உரைத்ததுபோலவே இயேசு யூதேயாவில் உள்ள பெத்லகேமில் பிறந்தார்! மனிதகுலத்தின் இரட்சகர், தாழ்மையாய் இப்புவியில் உதிக்கலானார்.

கர்த்தருக்கு சித்தமானால், அடுத்த மாதம், மனிதனின் பிரச்சினையான பாவத்திற்கு தேவனின் தீர்வு பற்றி நாம் படிப்போம். அதில் ஒரு மனிதன் தன் பாவத்திலிருந்து எப்படி இரட்சிக்கப்படுவது என்பதற்கான வேத வசனங்களும் அடங்கும். அதுவரைக்கும், தேவன் தந்த ஈடு இல்லாத பரிசாகிய குமாரனுக்காக அவருக்கு நன்றி சொல்லுவோம்!.

**PICKENS** **CHARLIE DI PALMA**

# தேவ சமூகத்திற்கு எட்டிய பாவத்தின் சத்தம்

திருமறை ஆசான் வாசகர்களாகிய உங்கள் யாவருக்கும் இந்த புத்தாண்டிற்கான வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். கிறிஸ்துவுக்குள் உங்கள் ஆத்துமா வாழ்வது போல நீங்களும் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருங்கள் என வாழ்த்தி செய்தியைத் தொடங்குகின்றேன். நமது செய்திக்குரிய வசனப் பகுதி யோனா 1:1-2 யை வாசியுங்கள். வசனம் 2ன் பின்பகுதி அவர்களின் அக்கிரமத்தின் விளைவு தேவசமூகத்தைச் சென்று சேர்ந்தது. செய்திக்குள் செல்லும் முன்பு நினிவே பட்டணத்தைப் பற்றி சற்று தெரிந்து கொள்வது இச்செய்தியைப் புரிந்து கொள்ள நமக்கு உதவியாக இருக்கும்.

***நினிவே பட்டணம் :***

இப்பட்டணம் அசீரிய ராஜ்ஜியத்தின் தலைநகரமாக இருந்தது நிம்ரோத் என்ற மன்னன் நினிவேயைக் கட்டினான் (ஆதி 10:11) என வேதவசனம் சொல்கிறது. பின்னாளில் அசீரிய ராஜா இதனை ஆண்டிருக்கிறான் (நாகூம் 3:18) இது கடற்கரை பட்டணமாய் இருந்தபடியால் இதன் செழிப்பிற்குப் பஞ்சமில்லை. அதே நேரம், இம்மக்களின் பாவ அக்கிரமங்களுக்கும் பஞ்சமில்லை. அவைகளின் சத்தம் தேவ சமூகத்திற்கு எட்டும் அளவிற்கு இருந்தது. இப்பட்டணம் ஏறக்குறைய (606 கி.மு.) முற்றிலும் அழிக்கப்பட்டுவிட்டது. (செப். 2:13) நினிவேயை வனாந்தரமாக்குவார் என்று கூறுகிறது. இப்பட்டணத்தின் ஜனங்கள் தேவனிடம் சற்றே இரக்கம் பெற்ற மக்களாக இருக்கின்றனர் (யோனா 4:11) இவர்கள் சோதோம் கொமோரா மக்களைப் போல் அல்ல.

***1. சோதோம் கொமோரா:***

இப்பட்டணம் யோர்தான் நதிக்கு அருகான சமபூமியில் இருந்து பசுமைச் செழிப்போடு தேவன் உண்டு பண்ணின ஏதேன் தோட்டம் போலிருந்தது (ஆதி 13:10) இங்கு நீதிமானாகிய லோத்து வசித்து வந்தான். தற்போது இது ஜோர்டான் (ஷீடான்) என்றழைக்கப்படுகிறது. இம்மக்கள் சற்றும் தேவ பயமற்றவர்களாகவும், பாலியல் சம்மந்தமான சகலவித அருவருப்புகளையும் (ஆதி 19:4-5) வாலிபர் முதல் கிழவர் மட்டும் ஆவலோடு நடப்பிக்கின்றவர்களாகவும் இருந்தனர். இப்பட்டணத்தாரின் பாவம் மிகவும் கொடிதாய் இருந்தது (ஆதி 18:20-21) அந்த பட்டணத்தைப் பார்க்க வந்த தேவ தூதர்களை கூட அவர்கள் விட்டு வைக்க தயாராய் இல்லையென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன் (ஆதி 19:24-25) ஆகவேதான் தேவன் அந்தப் பட்டணத்தை வானத்திலிருந்து வந்த அக்கினியினாலும் கந்தகத்தினாலும் அழித்துப்போட்டார். இன்றைக்கும் ஜோர்டான் என்ற பகுதியிலிருந்து கந்தகம் வெட்டி எடுக்கப்படுகிறது. இது வரலாற்று உண்மை. இவர்களின் பாவசத்தமும் தேவசமூகத்தில் எட்டினது ஒரு வேளை அங்கே "பத்து நீதிமான்கள்" இருந்திருந்தால் கூட அதனை அழித்திருக்க மாட்டார். ஆதலால் தான் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி அதனை அழித்தார். ஆனால் நினிவேக்கு எச்சரிப்பு கொடுக்கின்றார்.

***2. மனந்திரும்புதலின் அவசரம்*** (யோனா 3:1-9)

கர்த்தருடைய வார்த்தையின்படி தீர்க்கதரிசியாகிய யோனா செய்த சிறுபிரசங்கத்தால் (யோன 3:4) அரசன் முதல் அடிமைவரை எல்லோரும் தங்கள் பொல்லாதவழிகளை விட்டு மனந்திரும்பி கர்த்தரை நோக்கி முறையிட்டனர். பரலோகத்தின் தேவன் மனதுருகினார் (யோனா 3:10) கர்த்தர் அவர்களின் கிரியைகளை கண்டு செய்வேன் என்ற தீங்கைச் செய்யாதிருந்தார். அன்பானவர்களே நமது தேசமும் மனந்திரும்பவேண்டி அவசரத்தில் உள்ளது. எவைகளிலிருந்து மனந்திரும்ப வேண்டும்.

***3. விக்கிரக ஆராதனை மற்றும் பிரிவினைகள் :***

முதலாவது, தேவன் ஜீவனுள்ளவர் அவரை மனிதன் தன் கைவேலையால் உண்டாக்க முடியாது இஸ்ரவேல் ஜனங்கள் விக்கிரகங்களை உண்டாக்கினதால் ஒரே நாளில் (யாத் 32:20-28) 3000 பேர் கொல்லப்பட்டனர். எலியாவின் நாட்களில் 450 பேர் (I ராஜா 18:21-38), பாகால் என்ற விக்கிரகத்திற்கு பலிசெலுத்தி பலிபீடத்திற்கு முன்னாக தங்கள் உடலில் இரத்தம் வடியும் மட்டும் கீறிக்கொண்டனர். ஆனாலும் பாகாலிடமிருந்து ஒரு பதிலும் பிறக்கவில்லை. காரணம், அது ஜீவனற்றது. சங்கீதம் 115:3-8 ல், வாயிருந்தும் பேசாத, கால்களிருந்தும் நடக்காத, மூக்கிருந்தும் முகராதவைகள்.

நம் நாட்டில் எத்தனை சிலைகள் திருடர்களால் திருடப்பட்டுள்ளது, ஒரு சிலையாவது, "என் பக்தர்களே திருடனிடமிருந்து என்னைக் காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள்" என சத்தமிட்டுள்ளதா? கிறிஸ்தவ மார்க்க சிலைகளும் பேசுகிறதா? என்பதை யோசித்துப்பாருங்கள்.

**A. *நாம் யாவரும் ஒரே தேவனுடைய பிள்ளைகள் :***

ஆதி 3:20 ல் ஏவாள் என்பதற்கு ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள் என்று அர்த்தம் (அப் 17:26) எல்லா மனுஷரையும் ஒரே இரத்தத்தில் தோன்றப் பண்ணினார். ஆகவே, (கலா 5:20) பிரிவினைகளை விரும்புவோர் பரலோகத்திற்கு வரமுடியாது. பிரியமானவர்களே, நாம் ஒரே தேவனுடைய பிள்ளைகள் என்பதைப் புரிந்து கொள்வோம். நாம் வாழும் இடம் பேசும் மொழி, பழக்கவழக்கங்கள் இவைகள் வேறுபடலாம். ஆனால், நம் தகப்பன் ஒருவர்தான் அவர் சகலத்தையும் உண்டாக்கின கர்த்தர் (சங் 24:1) ஆகவே, நம்மிடையே இருக்கும் உருவ வழிபாடுகள் ஒழிக்கப்படவேண்டும் மனிதனை மனிதன் இழிவாய் நினைக்கும் பிரிவினைகள் நீங்கி ஒரே தேவ பிள்ளைகள் என்ற நிலைக்கு நாம் திரும்ப வேண்டிய அவரசத்தில் உள்ளோம். (அப். 10:34-35)

***4. நோவாவின் நாட்களில்*** ஆதி 6:5-8, 6:12-20

தேவன் படைத்த படைப்பிற்கெல்லாம் அதிகாரியாக வைத்த மனிதன் (பிர 7:29) தன் குறுக்குப் புத்தியினாலே தன்னைக் கெடுத்துக் கொண்டு மனிதனை ஏன் உண்டாக்கினோமோ என்று அவரே மனஸ்தாபப்படும்படியாயிற்று. தேவன் பூமியை அழிக்க சித்தங்கொண்டார். ஆனாலும் நீதிமான்களாகிய நோவாவின் குடும்பத்தாரை இரட்சிக்கவும், நோவாவின் பிரசங்கத்தை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் ஒரே ஒரு பேழையை உண்டாக்கினார் ஒட்டுமொத்த உலகத்திற்கும் ஒரே பேழைதானா? என நாம்

அவரை கேள்வி கேட்க முடியாது (ஏசா 28:29) அவர் ஆலோசனையில் மகத்துவமானவர் (லூக் 17:26-27) நோவாவின் நாட்களில் நோவா ஜனங்களிடம் மனந்திரும்புங்கள், ஜலப்பிரளயம் வரப்போகிறது என நூற்றி இருபது வருஷம் பிரசங்கித்தான். ஒருவராகிலும் மனந்திரும்பவில்லை (எபி 11:7) குடும்பத்தார் மட்டுமே பிரவேசித்து அழிவில் இருந்து காக்கப்பட்டனர். நோவா பேழையைக்கட்டியது போலவே இன்றைக்கும் ஜனங்களைக்காக்க தேவன் அவரது குமாரனை கொண்டு ஏற்படுத்தியது தான் சபை (யோவா 3:16)

## A. *கிறிஸ்து அதைக்கட்டினார்*


நோவா நீதிமானாயிருந்தான், கிறிஸ்து தேவ குமாரனாகவே இருக்கின்றார். அப் 20:28 அவர் தம் சொந்த இரத்தத்தைக் கொண்டு அதனை சம்பாதித்தார். சபையை, என் சபை என்கிறார் (மத் 16:18) சபையைக் கர்த்தர் போஷித்து காப்பாற்றுகின்றார் (எபே 5:29) அதற்கு அவரே தலையாக இருக்கின்றார் (எபே 1:23) அவர் மூலமே மகிமை உண்டாகிறது (எபே 3:21) நியாயத்தீர்ப்பு நாளில் அவரது நாமம் தரிக்கப்பட்ட சபையை பிதாவிடம் கிறிஸ்து ஒப்புக் கொடுப்பார். (1 கொரி 15:22-24) பிரியமானவர்களே, கிறிஸ்து கட்டிய பேழையாகிய கிறிஸ்துவின் சபைக்குள் நீங்கள் இருக்கின்றீர்களா? சபைக்குப் பெயர் முக்கியமா? என நீங்கள் கேட்கலாம். நான் ஒரு எளிய கேள்வியைக் கேட்கிறேன். ஜலப்பிரளயத்தின் நாட்களில் நோவாகட்டிய பேழை அவசியமா? உங்கள் பதில் ஆம் என்றால் இன்று சபைக்கு கிறிஸ்து என்கிற பெயர் வெகு அவசியமே. பலநூறு வசனங்கள் இதற்கு ஆதாரமாக வேதாகமத்தில் காணப்படுகிறது. அன்றைக்கும் இரட்சிப்பிற்கு ஒரே பேழை இன்று ஒரே சபை. இருதயத்தை கடினப்படுத்தாமல் சிறுபிள்ளைகளைப் போல தாழ்த்தி வசனத்திற்கு கீழ்ப்படிய வேண்டியது அவசியமாயிருக்கிறது. லூக்கா 6:46-48

## B. *நம் நாட்களில் நமக்கு கிடைத்துள்ள எச்சரிப்பு :*

பஞ்சங்கள், பூமியதிர்ச்சிகள், யுத்தங்கள் நம் தேசமன்றி வெவ்வேறு பகுதிகளில் நடந்தபோது நாம் "அடடா! பரிதாபம்" என்று நம் இரக்கத்தை வெளிப்படுத்திவிட்டு சில உதவிகளைச் செய்துவிட்டு, நம் வாழ்க்கை எந்த மாறுதலுமின்றி நடந்து கொண்டிருந்தது. ஆனால் டிசம்பர் 26/2004 ம் தேதியை நம்மில் இரக்கமுள்ள யாரும் எளிதில் மறக்க முடியாது. இவைகள் தேவ கோபத்தின் வெளிப்பாடா? (சங். 104:32) அவர் பூமியை நோக்கிப்பார்க்க அது அதிரும்.... பர்வதங்கள் புகையும் என நமக்கு சொல்லத் தெரியவில்லை. யோபு 40:3-4 என் வாயை பொத்திக்கொள்கிறேன். என்பதைத்தான் நாமும் செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம். அது தேவ ரகசியமாய் இருக்கிறது.

சோதோம், நினிவே ஆகியவைகளைப் போல நம் தேசத்தின் பாவம் அக்கிரமங்களின் சத்தமும் தேவசமுகத்திற்கு எட்டி விட்டதென்றே எண்ண தூண்டுகிறது. ஆகவே எந்த கேள்விக்கும் இடமின்றி மனந்திரும்பி கிரியைகளை காண்பிக்க வேண்டியது நம் கடமை. பிரசங்கி 12:13 தேவன் நமக்கு இரக்கத்தைக் கட்டளையிடுவாராக ஜெபியுங்கள். கீழ்ப்படியுங்கள். தேவ சமாதானம் நம்மை ஆளக்கடவது ஆமென்.

**S. பிச்சைமுத்து,** தூத்துக்குடி



# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELGU | Monday<br>to Friday | 5.30-5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45-7.00 p.m.<br>5.45-6.00 p.m.<br>5.30-5.45 p.m. | Box. 8405<br>Bangalore - 560<br>084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45-4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sansrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghese |

## PLEASE WATCH

ETC TV

Every Sunday from 6.00 to 6.30 a.m.

for a Christian Programme in Hindi

Please write to these address for Bible
Correspondence Courses,
Magazines and other Christian Litertures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2003
Licensed to Post without pre payment
TN / WR / ERD / 03 / WRP / 2003

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi
Annul Subscription Rs.30/-

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

## பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட


**ஓர் இலவச பயிற்சி.**

**இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.**

**பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

இயக்குனர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ. எண் - 27, காங்கேயம்.
தமிழ்நாடு. இந்தியா.

திருமறை ஆசான் இதழின் ஆசிரியர் திருமறை தியானம் நிகழ்ச்சியில் நற்செய்திப்பேருரை ஆற்றுகிறார்.




## ராஜ் டிவி யில் திருமறை தியானம்

**பிரதி புதன்கிழமை காலை 6.05 to 6.20 மணி**

## தமிழன் டிவி யில் திருமறை தியானம்

**பிரதி சனிக்கிழமை காலை 7.15 to 7.30 மணி**



Published by Church of Christ, Kangayam.
Printed at Konar Printers, Madurai - 625 012. Editor. S. Rajanayagam.